விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 30 செவ்வாய்க்கிழமை (14.03.2006) தொலைபேசி 222 3378 ஒலி 85

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# துணைக் குழுக்களின் செயற்பாடுகளை மகிந்தவின் அரசு வேடிக்கை பார்க்கிறது

## அன்ரன் பாலசிங்கம் சாடல்



(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் நடைபெற்று வரும் சம்பவங்களை எமது தலைமைப் பீடம் அவதானித்து வருகின்றது. கிழக்கில் தமிழ்த்துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் இதுவரை களையப்படவில்லை. எமது போராளிகள் மீது தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இவற்றை மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு கண்ணை மூடிக்கொண்டு வேடிக்கை பார்க்கின்றது என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார். தமிழ்நெற் இணையத் தளத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(கொழும்புத்துறை)

குடும்பப் பெண் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். நேற்று மாலை மத்தியூஸ் வீதியிலுள்ள பொதுக் கிணறு ஒன்றிலிருந்தே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மூன்று பிள்ளைகளின் தாயாரான பிரான்சிஸ் சேவியர் எலிசபேத் (வயது-55) என்ற குடும்பப் பெண்ணே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் மரண விசாரணை களின் பொருட்டு யாழ் .போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (சு)

## பிரதமர் ரட்ணசிறி அவுஸ்திரேலியா பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இன்று அவுஸ்திரேலியா பயணமாகின்றார்.

நாளை ஆரம்பமாகும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே அவர் அங்கு பயணமாகின்றார்.

அவுஸ்திரேலிய ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே ரட்ணசிறி விக்கிரமநாயக்க அங்கு பயணமாகின்றார்.

இப் பயணத்தின் போது கன்மரா, மல்போன் ஆகிய நகரங்களின் மாநகராட்சிமன்ற அதிகாரிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்குக் கிழக்கில் திட்டமிட்டபடி உள்ளூராட்சித் தேர்தல் நடக்கும்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு உட்பட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்காத சகல உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 30 ஆம் திகதி திட்டமிட்டபடி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்பகுதியில் சர்வதேச கண்காணிப்புக் குழுவினரை கடமையில் ஈடுபடுத்துமாறு கட்சிகள் கோரிக்கை விடுத்தால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராகவுள்ளதாகவும் ஆணையாளர் கூறியுள்ளார்.

தேர்தல் செயலகத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் தலைவர்களை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோதே ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இம் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஐ.தே.கவின் சார்பில் கருணாசேன கொடித்துவக்கு, ஜே.வி.பியின் சார்பில் ரில்வின் சில்வா, மேலக மக்கள் முன்னணியின் சார்பில் ஜெயரட்ணராஜா, மலையக மக்கள் முன்னணியின் சார்பில் பெ.ராதாகிருஷ்ணன் எம்.பி., அரசியல் செயலாளர் சிவகாந்தன், ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர் ஹாபீஸ் நஸீர் அகமட் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் அனைத்துப் பிரசார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட (12 ஆம் பக்கம் பார்க்க)

# எரிக் சொல்ஹெய்ம், ஹெல்கீசன் அடுத்த வாரம் இலங்கை வருகை

(கொழும்பு)

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தியமைச்சரும் இலங்கைக்கான சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வேயின் முன்னாள் துணை வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோர் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

எரிக் சொல்ஹெய்ம் இலங்கை வருதற்கு முன்னர் லண்டனுக்குச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேசவுள்ளதாகத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா மு.கா. மனுக்களை ஏற்குமாறு உயர் நீதிமன்றம் ஆணையாளருக்கு உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தில் போட்டியிடுவதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளுமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வேட்பு மனுக்களில் கையொப்பம் இட கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலர் ஆகியோருக்கு விதித்த இடைக்கால உத்தரவின் காரணமாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸி (12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு எம்.பிகளுடன் இளம்பரிதி இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் யாழ்.மாவட்ட அரசியல் துறையினருக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று காலை 10 மணியளவில் பளையிலுள்ள யாழ்.மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பில் யாழ்.மாவட்டத்திலுள்ள தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது. அத்துடன் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் குறித்தும் ஆராயப்படக்கூடும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சந்திப்பில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள் எனக் கூறப்பட்டது. (சு-4)

## பளைக்குச் சென்ற முஸ்லிம்களுக்கு முகமாலையில் அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து பளை நோக்கிச் சென்ற 40 முஸ்லிம்களை படையினர் கெடுபிடிக்குட்படுத்தி திருப்பியனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை சந்திக்க யாழ்ப்பாணத்திலிருந்து இக்குழுவினர் நேற்றுக் காலை படையினரின் 51-2 (12 ஆம் பக்கம் பார்க்க)

# இளம்பரிதியுடன் நேற்று கண்காணிப்புக் குழு பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதிக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டதலைவர் ஜோன் கண்காணிப்பாளர் கைடி ஆகியோருக்குமான சந்திப்பொன்று பளையில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நேற்று காலை 11 மணிக்கு நடைபெற்றது.

இச் சந்திப்பின்போது இளம்பரிதி ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் பின்னரும் சிறிலங்காப் படையினரால் திட்டமிடப்பட்ட வகையில் உள்நோக்கத்துடன் ஏற்படுத்தப்படும் மக்கள் மீதான நெருக்குவாரங்களை விபரித்தார்.

படைத்தரப் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.


எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சகல கல்வி வலயங்களிலும்

# உளவியல் ஆலோசனைப் பிரிவுகள்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களால் மற்றும் சமூக தாக்கங்களால் மாணவர்கள் மத்தியில் ஏற்படும் உளவியல் தாக்கங்களை நீக்கும் நோக்கில் கல்வி வலயங்கள் தோறும் உளவியல் ஆலோசனைப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஷபக்ஷவின் 'மஹிந்த சிந்தனை' திட்டத்தின் கீழ் இந்தப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளதாக கல்விய மைச்சின் சமூக உள அபிவிருத்தி ஆலோசனைப் பிரிவு தெரிவித் துள்ளது.

இயற்கை அனர்த்தங்களின் விளைவுகளால் மாணவர்கள் மத்தியில் உளவியல் தாக்கங்கள் ஏற்பட்டு கல்வியில் பெரும் பின்னடைவு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு உளவியல் சிகிச்சைகளை வழங்கும் வகையில் வலய மட்டத்தில் உளவியல் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப் படவுள்ளன.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தில் 24 கல்வி வலயங்களிலும், 24 சிரேஷ்ட பயிற்றுநர் களும் 135 உதவி பயிற்றுநர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(க-9)


## CARITAS-HUDEC JAFFNA
# VACANCIES

Caritas - Hudes seeks for its tsunami and IDP housing project implementation the services of

## Field Officers and field Coordinator (Construction)

Duty areas: Mullaitivu and Vaddemerachchi East (several positions)

### Main Duties:

* Assist in all construction supervisory activities, report on progress and bottienecks, receive information from beneficiaries and contractors, give regular information to project participants and local authorities as and when required.

* Provide regular project reporting in English to the Field Coordinator and/or Construction Manager. The Field Coordinator is also responsible for local staff monitoring and training.

* In collaboration with the administration to collect all the documents needed to establish the monthly and final project reports (contracts,agreements, purchase orders, good received notes, quotations and administrative details...).

* Be required to realise site supervision during Saturdays and Sundays on those sites where contractors are continuing their work. Time is compensated between Tuesday to Thursday.

* Manage the skilled labour (masons, carpenters, etc) in direct projett execution.

### Requirements:

*NCT in Civil Engineering or equivalent with 2 years experience in the same field.
*Demonstrated experience in project implementation, monitoring and evaluation.
*Strong interpersonal and liaison skills and team work oriented.
*Computer literacy in WinWord, Excel and email software.
*Experience in preparing weekly and monthly progress reports.
*Able to make BoQ and other quantity analyses of materials and supplies.
*Fluency in Tamil & English.

Remuneration will be commensurate with experiences and skills. Accommodation near the site.

Caritas-Hudec recruits for its construction programme qualified persons without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV with introduction letter, including you contact details (adderess and telephone) and minimal two reference to the following address, latest by: 25 March 2006

Father C.G.Jeyakumar
Caritas - Hudec
14 mathew's Road, Deogu Street,
Jaffna. or E-Mail: Hudec@sltnet.lk (c-a-265)



## CARITAS-HUDEC JAFFNA
# VACANCy

1.Livelihoods program Manager job Description

Job purpose : To work in full partnership with the caritas lnternationalis (ci) Livelihood program expatriate Advisor in designing .managing monitoring and evaluating projects which assist individuals affected by the tsuna,i to restore their livelihoods. To ensure a high degree of program quality in project design, inplementatiln, monitoring and evaluating .To work with CI livelihoods partner to identify capacity building needs of project officers, project managers and animators. To prepare timely reports to donors.

**Base station:** Based in jaffna @vettilaikerny

### Responsibilities :

The post holder reports directly to the Director, Livelihood Advisor & coordinator.The post holder will undertake the following activities

1. Direct, supervise and manage project officers. project managers and animators in identifying projects through a participatory process which are inclusive of a diverse group of individuals including vulnerable groups.
2. Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating
3. Bring expertise in the programme components: fisheries, agriculture and micro -finance
4. Identify capacity building needs of team;s project officers project managers and animators /social workers and local partners.
5. Organize tra inings and workshops to build and improve capacities of the above mentioned staff.
6. Prepare accurate and timely reports to donors
7. Share experiences methodologies and lessons learned with CI Livelihood partner in other diocese of sriLanka.
8. Represent caritas-hudec on the issue of livelihoods and income generating activities at district and divisional level coordination meetings with government, NGOs, UN organisations and the private sector.
9. Work with project officers to regulariy monitor and evaluate livelihook programs (fisheries, agriculture, small enterprises)

### skills and competencies:
### Essential

.Demonstrated management experience with a special emphasis on project management related to micro-enterprise and income generating activities

.Experience using word processors spreadsheets and email

. Knowledge and expeuience working with participatory methods

. Demonstrated knowledge in agriculture fisheries and small enterprises sectors

. Fluency in Tamil and English

. Good communication and managerial skills

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender. Women are encouraged to apply.

Post based in vetilaikerny with regular travels to jaffna and killnochchi and occasilnal travels to colombo

Interested candidates are encouraged to apply by submitting
1 Their curriculum vitae
2 A letter of motivation and
3 Two references before march 22. 2006 at Caritas - Hudec 14, Mathew's Road, Deogu street- Jaffna.

Submissions can also be sent by e-mail at hudec@sltnet. lk. only candidates retained for test/ interview will be notified by telephone. please make sure to include a telephone contact with your submission.

(c-a-265)


# வாக்காளர் அட்டை நாளை முதல் விநியோகம்

வடமாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை எதிர்வரும் புதன் கிழமை முதல் சம்பந்தப்பட்ட வாக்காளர்களுக்கு விநி யோகிக்கப்படவுள்ளதாக யாழ்.தபால் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் வாக்காளர் அட்டைகள் கடந்த திங்கட்கிழமை தேர்தல் திணைக்களத்தால் தபால் திணைக்க ளத்துக்குக் கையளிக்கப்பட்டுவிட்டது.

இன்று தபால் விடுமுறையாதலால் அவை நாளை புதன்கிழமை தொடக்கம் வாக்காளர்களுக்கு விநியோகி க்கபடவுள்ளது. (132,133)

# இல்ல விளையாட்டுப் போட்டி

யா/ கோப்பாய் றோ.க.த.க பாடசாலையின் வரு டாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.00மணிக்கு பாடசாலை மைதான த்தில் அதிபர் எஸ்.எஸ்.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந் தரமும், சிறப்பு விருந்தினராக சுவிஸ் அபிவிருத் திக் கூட்டுத்தாபன பொறியியலாளர் சு.சுதர்சனும், கௌரவ விருந்தினர்களாக திருநெல்வேலி கோப்பாய் பங்குதந்தை எவ்.என்.என்.குறூஸ் அடிகள் கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் யோசப் இரத்தினராஜா, கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் தி.வரதராஜன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-79-9)

# இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்க்க விசேட திட்டம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான விசேட திட்டமொன்று கல்வியமைச்சின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு தசாப்த காலமாக நிலவிவருகின்ற யுத்த சூழ்நிலை மற்றும் குடும்ப வறுமை நிலைமைகாரணமாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாடசாலைகளை விட்டு இடைவிலகியிருப்பதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

பெற்றோர்கள் மத்தியில் போதிய அறிவின்மை காரணமாக பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் உரிய வயதை அடைந்தும் பாடசாலைக்குச் சேர்க்கப்படாமல் இருப்பதும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இடைவிலகிய மாணவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்குக் கல்வியை மீண்டும் வழங்கி பாடசாலைகளில் சேர்ப்பதற்கு கல்வி அமைப்பினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு இதுவரை செல்லாத சிறுவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களை வகுப்புக்களில் அனுமதிப்பதற்கும் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. (க-9)

## திருப்பலி

(ஊர்காவற்றுறை)

யாழ்.கோட்டை சந்தியிலுள்ள புனித - அந்தோனியார் சிற்றாலயத்தில் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் திருப்பலி நடைபெற்று வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-72)

# செய்முறைப் பரீட்சை

(கொழும்பு)

வட இலங்கை கர்நாடக சங்கீத சபையின் வருடாந்த செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை அகில இலங்கை ரீதியில் நடைபெறவுள்ளதாக மேற்படி சபையின் யாழ்.அலுவலக பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதிக் கடிதங்களும் நேர அட்டவணைகளும் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு அனுமதிக்கடிதங்கள், நேர அட்டவணைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள் வட இலங்கை கர்நாடக சங்கீத சபை யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இம்முறை தரம் ஒன்றிலிருந்து தரம் நான்கு வரையான செய்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கான பரீட்சைகள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் அவ்வப் பகுதிகளிலுள்ள அரசினர் பாடசாலைகளில் இடம்பெறவுள்ளன என்று அவ் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## கிரியை மண்டபம் அமைத்துத் தருக!

(பொன்னாலை)

அராலி மத்தி வேலன்காடு இந்து மயானத்திற்கு கிரியை மண்டபம் இதுவரை அமைக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால், மழை மற்றும் வெயில் காலங்களில் தகனக் கிரியைகளுக்குச் செல்வோர் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர் என்றும்,

இதனால் மேற்படி இந்துமயானத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கிரியை மண்டபம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-49)

## இல்லமெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று காலை 9.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் க.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கந்தையா குமாரசாமி கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி சிவனேஸ்வரி குமாரசாமி வழங்குவார். (க-9)

# உரமானியத்துக்கான செலவீனத்தை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது

(கொழும்பு)

உரமானியம் வழங்கப்படுவதால், 157 கோடி ரூபா செலவீனத்தை அரச்ாங்கம் ஏற்றுள்ளதாக கமநல சேவை மற்றும் விவசாயிகளை ஊக்குவிக்கும் அமைச்சு தெரிவிக்கின்றது.

கமநல சேவைகள் மத்திய நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்ட உரவகைகளுக்கான தொகைக்கே அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசிறீ தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் இந்தப் பாரிய தொகையை உரம் விநியோகிப்பதற்காக செலவிடப்படவில்லையென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இம்முறை சிறுபோகத்தின்போது விவசாயிகளுக்கு மானிய விலைக்கு உரம் வழங்கப்பட்டதால், பயிர்ச் செய்கை அதிகரித்துள்ளதுடன், நெல் அறுவைடையும் அதிகரித்துள்ளது.

இதேவேளை அரிசி கையிருப்பு மேலதிகமாகவுள்ளதால், அரிசி சார்ந்த உற்பத்திப் பொருட்கள் பாவனையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (க-7)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் மலரில் மாசி மாத ஞானச்சுடர் வெளிவந்துள்ளது. (க-9)

# போதைப் பொருள் வியாபாரிகளை கைது செய்ய விசேட திட்டம்

(கொழும்பு)

பெரியளவில் போதைப்பொருள் விற்பனைகளில் ஈடுபட்டுவரும் போதைப்பொருள் வியாபாரிகளைக் கைது செய்வதற்கான விசேட திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக கைது செய்யப்பட்ட போதைப்பொருள் வியாபாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையிலேயே இந்த விசேட திட்டத்தை தயாரித்துள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டவர்களை கைது செய்வதற்கு 3 விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (க-9)

# 5 சட்ட மூலங்கள் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்ட யோசனைகள் தொடர்பான பல சட்டமூலங்கள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார சேவை கட்டண சட்ட மூலம், முத்திரை வரிச் சட்டமூலம், நாணயவிதிகள் திருத்த சட்டமூலம், வங்கித் திருத்த சட்ட மூலம், சூதாட்ட வரி அறவீட்டுத் திருத்த சட்ட மூலம் ஆகியனவற்றில் அடங்குகின்றன.

இந்தச் சட்டமூலங்களின் அநேக விதிகள் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அமுலாகும்.

இதேவேளை முத்திரை வரியை மீண்டும் கொண்டு வருவதன் மூலம் அரசாங்கம் மேலதிகமாக 370கோடி ரூபாவைப் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று சூதாட்ட வரி அதிகரிக்கப்படுவதால், வருமானம் 300 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

நாணய விதிகள் திருத்த சட்டமூலத்தின்படி இறக்குமதி செய்யப்படும் நாட்டிய நாடகங்கள், வர்த்தக நோக்குடைய திரைப்படங்கள் ஆகியவற்றின் மீது வரி விதிக்கப்பட இருக்கின்றது. (க-7)

# தமிழ்மொழி மூலமான சகல முறைப்பாடுகளும் பதியப்படவேண்டும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி மூலமான சகல முறைப்பாடுகளும் பதியப்பட வேண்டுமென்று இலங்கை அரச கரும மொழி ஆணைக்குழு ஊடாக இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு மொழி உரிமை தொடர்பான செயலமர்வுகளை இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு நடத்தி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட முதலாவது செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாநகர சபை நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. (க-9)

# சுனாமிக்குப் பின் பாலியல் நோயினால் பலர் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி கடல் சீற்றத்திற்குப் பின்னர் பாலியல் ரீதியிலான நோய்கள் அதிகரித்திருப்பதாகவும் இதனைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகளைச் சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் பாலியல் தொடர்பான சிபிலேஸ், கொனேரியா, கெபிஸ் போன்ற நோய்கள் மிக வேகமாக பரவி வருகின்றது.

இவை தவிர, எயிட்ஸ் நோயினாலும் 9 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பாலியல் நோய் தடுப்பு சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

வேகமாகப் பரவி வரும் எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய்களைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மாகாண பிரதி சுகாதார சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டலில் உலக தரிசன நிறுவனம் 30 விழிப்பூட்டல் செயலமர்வுகளை ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் 10 ஆயிரம் கிராம சேவை அதிகாரிகள், சமுர்த்தி அலுவலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய பாடசாலை மாணவர்கள் உட்பட பல தரப்பட்டோரையும் விழிப்பூட்ட முடியுமென்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதலாவது செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது இதில் பாலியல் தடுப்பு மருத்துவர்கள் விரிவுரைகளை நடத்தினார். (க-9)

# பெருவிளையாட்டுப் போட்டிகளில் நெல்லியடி ம.ம.வி முன்னிலையில்

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே இவ்வருடம் நடைபெற்ற பெருவிளையாட்டுக்கள் பெரும்பாலானவற்றில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணிகள் சம்பியன் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ளது.

ஏழு விளையாட்டுக்களில் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளதுடன் பன்னிரண்டு விளையாட்டுக்களில் மாவட்டமட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

| போட்டி | வயதுப்பிரிவு | பெற்ற இடம் |
|---|---|---|
| உதைபந்தாட்டம் | 17 வயது | 1 ஆம் இடம் |
| உதைபந்தாட்டம் | 19 வயது | 1 ஆம் இடம் |
| கிரிக்கெற் | - | 1 ஆம் இடம் |
| மேசைப்பந்தாட்டம் | ஆண்கள் | 1 ஆம் இடம் |
| மேசைப்பந்தாட்டம் | பெண்கள் | 1 ஆம் இடம் |
| பட்மின்ரன் | ஆண்கள் | 1 ஆம் இடம் |
| பட்மின்ரன் | பெண்கள் | 2 ஆம் இடம் |
| சதுரங்கம் | 19 வயது பெண்கள் | 1 ஆம் இடம் |
| சதுரங்கம் | 19 வயது ஆண்கள் | 2 ஆம் இடம் |
| சதுரங்கம் | 17 வயது ஆண்கள் | 2 ஆம் இடம் |
| சதுரங்கம் | 15 வயது பெண்கள் | 3 ஆம் இடம் |
| கரப்பந்தாட்டம் | 15 வயது பெண்கள் | 2 ஆம் இடம் |
| கரப்பந்தாட்டம் | 17 வயது பெண்கள் | 2 ஆம் இடம் |
| கரப்பந்தாட்டம் | 17 வயது ஆண்கள் | 3 ஆம் இடம் |

(து)

# இரண்டு இலட்சம் பேரே வரி செலுத்துகின்றனராம்

(கொழும்பு)

இலங்கை வாழ் மக்களில் 2 இலட்சம் பேர் மட்டுமே அரசாங்கத்திற்கு வரிசெலுத்துவதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தமது திணைக்களத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் அதிக வருவாயைப் பெறும் பலர் குறிப்பாக மருத்துவர்கள், சட்டத்தரணிகள், தனியார் கல்வி நிலையங்களை நடத்துவோர் அரசாங்கத்திற்கு வரிசெலுத்துவதில்லை என்பது தெரிய வந்துள்ளதாகவும்,

இந்த நிலையை மாற்றும் நடவடிக்கைகளில் தற்சமயம் தமது திணைக்களம் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்த ஆணையாளர்,

தொலைபேசி அல்லது மின்சார விநியோகத்திற்காக மாதாந்தம் 10ஆயிரம் ரூபாவிற்கு மேல் செலுத்தும் நுகர்வோர்கள் வரி கட்ட வேண்டிய கடைப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (க-9)

# இன்று ஒரு தகவல்

## கல்விக்குக் கரையில்லை

"என்ன சார்? எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் என் நண்பர். "வாருங்கள்... உட்காருங்கள்... என்ன இந்தப் பக்கம்...அதுவும் இந்த நேரத்தில்? என்றேன். "உங்களிடம் வந்தால்.. ஏதாவது அறிவுரை கேட்கலாம் என்று நினைத்து வந்தேன்" என்றார். "பெரியவர்கள் இப்படித்தான் சார் இருந்திருக்கிறார்கள்" என்றேன். "எப்படி?" என்றார். "எத்தனை நாள் வாழ்வேனோ அத்தனை நாளும் ஏதாவது கற்றுக்கொண்டே இருப்பேன் என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்லியிருக்கிறார். இதை நினைவுபடுத்துவது போல் சுவாமி ராமதீர்த்தருக்கு ஓர் அனுபவம் ஏற்பட்டது" என்றேன். "விபரமாகச் சொல்லுங்கள்" என்றார். சொல்ல ஆரம்பித்தேன்.

சுவாமி ராமதீர்த்தர் ஒருமுறை கப்பலில் ஜப்பானுக்குப் போய்க்கொண்டிருந்தார். அதே கப்பலில் இன்னொரு ஜப்பான்காரரும் போய்க்கொண்டிருந்தார். அந்த ஜப்பான்காரருக்கு 90 வயதிற்கு மேலிருக்கும். மிகவும் வயதானவர். கைகாலில் எல்லாம் ஒரே நடுக்கம். உடலும் பலவீனமாகத் தெரிந்தது. வயதாகிவிட்டால் அப்படித்தானே! அந்த முதியவரும் அந்தி நிலைமையில் தான் இருந்தார்.

அவர் பேசாமல் ஒரு மூலையில் படுத்துக்கொண்டுவர வேண்டியதுதானே. ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. என்ன செய்துகொண்டு வந்தார் தெரியுமா? ஒரு மொத்தமான கண்ணாடியைப் போட்டுக் கொண்டுவந்தார். சீனமொழியில் ஏதோ ஒரு பாடத்தைத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டே எழுதிக் கொண்டிருந்தார். கையோ நடுங்கிக் கொண்டிருக்கிறது. பார்வையோ சரியில்லை. இந்த நிலையில் அது அவருக்குத் தேவையா? சுவாமி ராமதீர்த்தருக்கு இது கொஞ்சம் வித்தியாசமாகத் தெரிந்தது.

"பெரியவரே...இவ்வளவு தீவிரமாக என்னவோ செய்து கொண்டிருக்கிறீகளே... என்ன அது?" என்று கேட்டார். "சீன மொழியைக் கற்கவேண்டும் போல் தோன்றியது! எழுதிப் பார்த்தால் மொழிப் பயிற்சி கிடைக்குமே... அதனால் அந்த மொழியில் எழுதிப் பழகுகிறேன்" என்றார். "மற்ற மொழிகளை விட அந்த மொழி மிகவும் கடினமானது என்று கேள்விப்பட்டேன்" என்றார் இவர். "கடினமானது என்றால் அதைப் பயிலக் கூடாதென்றில்லையே" என்றார் அந்தப் பெரியவர். "அந்த மொழியை முழுதாகக் கற்பதற்கு வருடக் கணக்காகுமே! உங்களுக்கோ கையும் காலும் சொன்னபடி கேட்கமாட்டேன் என்கிறதே" என்றார் சுவாமிஜி.

"அப்படியென்றால் நான் சீனமொழியைக் கற்றுக்கொள்ளும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்கிறீர்களா?" என்றார் பெரியவர். "நான் அப்படியெல்லாம் உங்களுக்கு யோசனை சொல்லலாமா? ஆனால் ஒன்றுமட்டும் தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்" என்றார். "என்ன?" என்று கேட்டார். "இப்படியெல்லாம் செய்யவேண்டும் என்று உங்களைத் தூண்டியது எது எனபதை மட்டும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்" என்றார். காகிதத்தை மடித்து ஒரு பக்கமாக வைத்துவிட்டு அந்தப் பெரியவர் சொன்னார் "நான் உயிருடன் இருக்கும் வரை ஒன்று இல்லாவிட்டால் ஒன்று என ஏதாவது புதிதாக ஒன்றைக் கற்றுக் கொண்டே இருக்கவேண்டும்! இதுதான் என் ஆசை" என்றார். "ஆனால் உங்கள் உடல் நிலை புதிதாக கற்றுக்கொள்ளும் முயற்சிக்கு சாதகமாக இல்லை போலிருக்கிறதே" என்றார்.

"அட வாழ்க்கை என்பதுதான் என்ன? ஆதி அந்தமில்லாத தங்கு தடை இல்லாத ஒரு பிரவாகம் அது... ஓயாமல் பிரவகிக்கும் வாழ்க்கை நீரோட்டத்தின் ஊடே ஒவ்வொரு கணமும் புதிதாக ஏதாவது ஒன்றை அறிய, ஒன்றைக் கண்டுபிடிக்க ஒரு சிந்தனையில் லயிக்க வாய்ப்புக் கிடைத்தால் அதைக் கை நழுவி விடக்கூடாது" என்றார் அந்த முதியவர். இப்போது தான் சுவாமி ராமதீர்த்தருக்கு ராமகிருஷ்ணர் கூறியது நினைவுக்கு வந்தது. "எத்தனை நாள் வாழ்ந்தேனோ அத்தனை நாளும் ஏதாவது கற்றுக்கொண்டே இருப்பேன் என்று சொன்னாரே அது!

இப்படி நான் சொல்லி முடித்ததும் எதிரில் இருந்த என் நண்பர் சொன்னார் " எனக்கும் கூட அப்படித்தான். புதிது புதிதாக ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசை... அதுதான் உங்களிடம் வந்தேன்'' என்றார். எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. "இன்று என்னிடம் வந்ததனால் புதி தாக என்ன தெரிந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டேன்.

''புதிதாக எதையாவது தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் இனிமேல் உங்களைத் தேடி வரக்கூடாது என்று தெரிந்து கொண்டேன்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கண்காட்சி

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தின் ஏற்பாட்டில் பிரெஞ்சு மொழிக் கவிதைகளின் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

கந்தர்மடத்தில் உள்ள கழகத் தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு கவிஞர்களின் வசந்த காலம் என்ற கவிதை வாசித்தலுடன் கண் காட்சி ஆரம்பமாகியது. இக் கண்காட்சி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் .

பிரான்சினதும் பிரெஞ்சு மொழி பேசும் நாடுகளினதும் கவிதைகளுக்கும் இலக்கியத்துக்குமான மாதமாக இம்மாதம் அனுஷ்டிக்கபடுகின்றது. அதை யொட்டி இந்தக் கவிதைக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்ய ப்பட்டுள்ளது. (க-9)

## சட்டவிரோத கடனளிப்புக்களால் பலகோடிகளை இழந்த வங்கிகள்

(கொழும்பு)

பிரதான வங்கிகளான மத்தியவங்கி, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி மீது அண்மையில் நடத்தப்பட்ட கணக்காய்வின் போது கடந்த சில வருடங்களாக இவ் வங்கிகளால் வழங்கப்பட்டு வந்த சட்ட விரோத கடனளிப்புக்களினாலும், பொருண்மிய கட்டுப்பாடற்ற கொடுப்பனவுகளினாலும் பல கோடி ரூபாய்களை இழந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை தலைமை கணக்குப் பரிசோதகர் 2004 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் சுட் டிக்காட்டுகையில்,

1988 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில், மத்தியவங்கி மட்டும் கடன் சுமைகளில்இருந்து மீள்வதற்கான கொடுப்பனவெனக் கூறி 2ஆயிரத்து 772மில்லியன் ரூபாய்களை எதுவித கடன் பத்திர பாதுகாப்புகளுமின்றி 13 நிதி நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. இத் தொகை மார்கழி 2004ஆம்ஆண்டு முடிவின் போது வட்டியும் முதலுமாக 7 ஆயிரத்து 200 மில்லியன் ரூபாய்களாக வளர்ச்சி கண்டுள்ளது.

ஆனால், இந்நிதி நிறுவனங்களோ தங்கள் பிரச்சினைகளில் இருந்து இதுவரையில் மீளாத நிலையில், இத் தொகையினை மீளப்பெறுவது என்பது மிகவும் சந்தேகத்திற்கிடமாகவே உள்ளது.

இது மட்டமன்றி, 2002 ஆம் ஆண்டில் மட்டும் இலங் கைபிரமுகர் ஒருவர் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுடன் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட இரகசிய உடன்படிக்கை யினை நிறுத்த மத்தியவங்கி எதுவித நடவடிக்கையினை யும் எடுக்காததனால் மட்டும் வெளிநாட்டு நாணய வருமான மான 900 மில்லியன் ரூபாய்களை இழக்க வேண்டி ஏற்பட்டது.

வர்த்தக வங்கியின் கடன் அட்டை வாடிக்கையாளர்களுக்கென வழங்கப்பட்டிருந்த சலுகைகளை பயன்படுத்தி கிட்டத்தட்ட 1000பேர் வரை 3 ஆம் தரப்பினரின் கொடுப்பவுகளுக்கான தீர்வுப் பணத்தற்கெனக் கூறி தங்களது கடன் அட்டைகளை வெளிநாடுகளுக்கு பணம் அனுப்ப சட்டவிரோதமாக பயன்படுத்தியதைக் கண்டுபிடிக்க மத்திய வங்கி தவறிவிட்டதனையும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த இரகசிய சட்டவிரோத நடவடிக்கைகள் வெளிச்சத்திற்கு வந்த பின்னர் , மக்களுக்கு அறிவூட்டுவதற்கென வெளியிடப்பட்ட விளம்பர செலவுகளுக்கென மட்டும் கிட்டத்தட்ட 6மில்லியன் ரூபாய்களை செலவழித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இது போலவே இலங்கை வங்கியும் பல்வேறு மோசடிகளுக்கு உடன்பாடாக இருந் ததும் இக் கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

இது போன்ற பல்வேறு மோசடிகளில் இவ் வங்கிகள் பாராமுகமாக பொறு ப்பற்றமுறையில் நடந்து கொண்டதனால் பல கோடி ரூபாய்களை மீளப்பெற முடியாத பரிதாப நிலைக்கு இவ் வங்கிகள் தள்ளப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

## பறவைக்காய்ச்சல் அபாயத்தை முற்றாக நீக்க சர்வதேச நாடுகளின் ஆதரவு பெறப்படுமாம்

(கொழும்பு)

இலங்கையில் பறவைக்காய்ச்சல் நோய் அபாயத்தை முற் றாக நீக்குவதற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு பெற்றுக் கொள்ளப்படவிருக்கிறது என்று கால்நடை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அமரசேகர இது பற்றித் தெரிவிக்கையில்,

இது சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கிறது என்று கூறினார்.

உலக சுகாதார நிறுவனத்தினதும், ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள் என்றும் இலங்கையில் பறவைக் காய்ச்சல் நோய் காணப்பட்டால், தமது திணைக்களம் ஒரு சில மணித்தியாலத்துக்குள் அது பற்றி பொது மக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் டாக்டர் அமரசேகர தெரி வித்தார்.

எனவே , மக்கள் அநாவசியமாக இந்நோய் பற்றி பீதியடையத் தேவையில்லையென்றும் அவர் குறிப்பிட்டார். (க-7)

## உலக பத்திரிகை தினம்

(கொழும்பு)

உலக பத்திரிகை தினம் மே மாதம் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ளது. 'ஊடக அபிவிருத்தியும் வறுமை ஒழிப்பும்' எனும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ள இந்த தினம் கொழும்பில் நடைபெறும் என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்ச ரவை பேச்சாளருமான அனுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ,

உலக பத்திரிகை தினத்தை இலங்கையில் நடத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது.

இத்தினத்தன்று நடைபெறுகின்ற நிகழ்வுகளுக்கு ஊடகத்துறை அமைச்சு முழுமையான ஆதரவு வழங்கவுள்ளது.

இந்தத் தினத்தில் நடைபெறுகின்ற நிகழ்விற்கு வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் வருகை தரவுள்ளனர். இதனைத்தவிர இலங்கை ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஊடக அமைச்சினூடாக பல்வேறு துறைசார்ந்த பயிற்சி நெறிகள் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-9)

## போக்குவரத்து சேவையை சீர்செய்ய விசேட நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் போக்குவரத்துச் சேவையை சீராக வழங்குவதற்கு தாம் விசேட நடவடிக்கைகளை எடுத்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் பஸ் சேவையை விஸ்தரிக்கவென இந்தியாவிலிருந்து 2ஆயிரம் பஸ்களை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திப் பட்டுள்ளன.

இதற்கமைய 350 பஸ்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்துள்ள இலங்கை போக்குவரத்து சபை, அவற்றை உடனடியாக சேவையில் ஈடுபடுத்தியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு நகர்ப்பகுதியிலும் கொழும்பு பெரும் பாகத்திலும் போக்குவரத்துச் சேவையை சீரமைப்பது தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பழுதடைந்ததாகக் கூறி கைவிடப்பட்ட 488 பஸ்கள் திருத்தப்பட்டு இந்த மாதம் முடிவிற்கு முன்னர் மக்களின் போக்குவரத்து சேவைக்கு விடப்படும் என்றும் கூறினார். (க-9)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்களின் வளர்ப்பு நாய்களுக்கு , நீர்வெறுப்பு நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து(ஏ. ஆர் .வி) ஏற்றப்படவுள்ளது.

அதன்படி ஜே/44 கிராம அலுவலர் பிரிவில் நாளை புதன்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை ஊரி அன்ரசன் சனசமூக நிலையத்திலும், 11.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை பாலாவோடை சனசமூக நிலையத்திலும், மதியம் 1 மணி முதல் 2 மணிவரை முருகமூர்த்தி கோயிலடி களபூமியிலும், மாலை 2.15 தொடக்கம் 3.15 மணிவரை பிட்டியெல்லை கடற்தொழிலாளர் சங்கத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

அவ்வாறே ஜே/ 48 கிராம அலுவலர் பிரிவில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 12.30 மணிவரை காரைநகர் மத்தி. சிவகாமியம்மன் கோவில் வீதியிலும், மதியம் 1 மணி தொடக்கம் 2 மணி வரை காரைநகர் மத்தி கடற்தொழிலாளர் சங்கத்திலும், மாலை 2.15 மணி முதல் 3.15 மணி வரை வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரையும் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு தவறாது தடுப்பூசி போடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. (க-7)

## புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் வாக்குச்சாவடிகள்;

### தேர்தல் ஆணையாளர் தான் முடிவுசெய்ய வேண்டும்

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்குச்சாவடிகள் அமைப்பது குறித்து தேர்தல் ஆணையாளர் தான் முடிவெடுக்க வேண்டும் என வன்னி உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ்.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் ஆகியவற்றில் வாக்குச்சாவடிகள் அமைப்பது குறித்து இன்னமும் இழுபறி நிலை காணப்படுவதாகவும் இது தொடர்பாக தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க)

# கற்றல் இடர்பாடுள்ள சிறுவர்கள்

*கேள்வி:*-புத்திக்கூர்மையினை எவ்வாறு கணிக்கலாம்?

*பதில்:*- ஒருபிள்ளையின் வயதிற்கு விடையளிக்க வேண்டிய கேள்விகளுக்கும் அப்பிள்ளை விடையளித்த கேள்விகளுக்குமான 100% புத்திக்கூர்மையினைக் (IQ) கொடுக்கும் சாதாரணமாக ஒருவருக்கு 120 ஆக அமையும்.



ஆனால் தற்போது G factor (பொதுக்காரணி) எனும் அளவீடு ஒருவரின் திறமையை அளவிடப் பயன்படுகின்றது.

இதில் ஒருவரின் கல்வித் திறன் மட்டுமன்றி அழகியற் திறன் உட்பட பலதிறன்கள் அளவிடப்படுகின்றது.

*கேள்வி:*- புத்திக்கூர்மை குறைந்த குழந்தைகளின் பிரிவுகள் யாவை ?

*பதில்:*-விசேட கவனத்துடன் கல்விகற்பிக்கக்கூடிய புத்திக் கூர்மை உடையவர்கள் (IQ= 50-70)அன்றாட கருமங்களை செயற்படுத்த பயிற்றப்படக்கூடிய புத்திக்கூர்மை உடையவர்கள் (IQ 35-50)மற்ற செயற்பாடு உடையவர்கள் (IQ 35க்கு கீழ்)

*கேள்வி:*-புத்திக்கூர்மை குறைவடைவதற்குக் காரணங்கள் யாவை?

பதில்:-1. பரம்பரைக்காரணிகள். 2. தாயின் கருப்பையில் இருக்கும் போது ஏற்படும் பாதிப்புக்கள். 3. பிறக்கும் போது ஏற்படும் பாதிப்புக்கள். 4. பிறந்தபின் ஏற்படும் பாதிப்புக்கள். 5. போசனைக்குறைவு. 6. சுழல் தூண்டல் குறைவு.

## மருத்துவ விளக்கம்

**இசைக்கு மயங்க வைக்கும் தன்மை உண்டு. கண்ணனின் புல்லாங்குழல் ஓசையைக் கேட்டு கடித்த புல் கடைவாய் வழி சேர பசு இனங்கள் மயங்கி நின்றதாக திருவாய் மொழி கூறுகிறது. அதுபோலவே கற்றல் இடர்பாடுள்ள சிறுவர்களின் மனநிலையை விருத்தி செய்ய இசைக்கு சக்தி உண்டு என மருத்துவ ஆர்வலர்கள் கூறுகிறார்கள்.**

**கற்றல் இடர்பாடுள்ள சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அவற்றை நிவர்த்திப்பதற்கான வழி முறைகளையும் விரிவாக விளக்குகிறது கேள்வி -பதில் மூலமாக இக்கட்டுரை.**

*கேள்வி:*- மொழியாற்றலில் குறைபாடுகள் ஏற்பட ஏதுவான காரணிகள் யாவை?

*பதில்:*- கேட்டல் புலன்பகுதி பாதிப்படைதல், பார்வை புலன் பாதிப்படைதல், பேச்சுத்திறன் பாதிக்கப்படல், எழுத முடியாமை, மூளையின் புலன் உணர்வுப் பரப்பு பாதிக்கப்படல், மூளையின் இயக்கப் பரப்புப் பாதிக்கப்படல்.

*கேள்வி:*-கற்றல் இடர்பாடுகளை எவ்வாறு மதிப்பிடலாம்?

*பதில்:*- புத்திக் கூர்மை மொழி ஆற்றல், இயக்கச் செயற்பாடு, சமூக உறவுகள் என்பவற்றினை அவதானிப்பதன் மூலம்.

*கேள்வி:*-கற்றல் இடர்பாடுகளை மதிப்பிடுவதால் யாது இலாபம் பயக்கும்?

*பதில்:*-நிவர்த்தி செய்யக் கூடிய குறைபாடுகளைத் திருத்துவதால் கற்றலை ஊக்கப்படுத்தலாம். ஒருவரில் உள்ள குறைபாட்டிற்கு ஏற்ப விசேட கல்வி அல்லது செயல்திறனை ஊக்குவிக்கலாம்.

*கேள்வி*-வகுப்பறையில் கற்றல் இடர்பாடு உள்ளவர்களை எவ்வாறு கண்டறியலாம்?

*பதில்:*- நிறமூர்த்தத்தில் மாறுபாடு கொண்டவர்கள் மொங்கோலியத் தோற்றம் உடையவர்களாக இருப்பர். கிரகித்தல் கடினம், பாடசாலைக்கு ஒழுங்காக வராமை என்பன காணப்படும். ஓவியங்கள் வரையும் போது தங்களின் வயதிற்கு எற்ப வரையமாட்டார்கள்.

*கேள்வி:*- கற்றல் இடர்பாடு உடைய சிறுவர்களின் பெற்றோருக்கு கூற வேண்டிய அறிவுரைகள் யாவை?

*பதில்:*-பிள்ளையின் புத்திக்கூர்மையினையும் அவர்களது எதிர்காலத்திட்டம் பற்றியும் கூற வேண்டும். சில பெற்றோர் அதனை ஏற்க மறுப்பர். அல்லது விரக்தி அடைவர். பிள்ளைகளில் வெறுப்புறுவர். இதனைத் தவிர்க்க முயற்சிகள் செய்ய வேண்டும்.

கற்றல் இடர்பாடுடைய பிள்ளைகளுக்கு தனித்தனியாக அவர்களின் செயற்றிறனை ஊக்குவிக்க வேண்டும். அன்றாட வேலைகளை செய்யக் கற்றக் கொடுத்தல் வேண்டும்.

**டாக்டர் சி.யமுனாநந்தா**

பெரும்பாலான பிள்ளைகள் இசையை இரசிப்பர். அதற்கு அபிநயம் செய்வர்.

*கேள்வி:*-கற்றல் இடர்பாடுடைய சிறுவர்களைச் சாதாரண பாடசாலைகளில் கற்பிக்கலாமா?

*பதில்:*- சாதாரண பாடசாலைகளில் அவர்களிற்கு விசேட கவனிப்பு வழங்கப்படல் வேண்டும். அன்றேல் அவர்களுக்கென உள்ள விசேட கல்வி நிலையங்களில் அனுமதிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் இதற்கென ARK எனும் அமைப்பு உடுவிலில் சிறப்பாக இயங்குகின்றது.

*கேள்வி:*-குழந்தைகள் அதிக புத்திக்கூர்மை உடையவர்களாக வர யாது செய்ய வேண்டும்?

*பதில்:*- தாய்மார் கற்பகாலத்தில் இருந்து போசாக்குள்ள உணவை உண்ண வேண்டும். சிறிய மீன்களை உண்டால் மூளை வளர்ச்சிக்குத் தேவையான போசனைகள் கிடைக்கும்.

குழந்தை வயிற்றில் உள்ள போது தாய் இசையை இரசிப்பதாலும் குழந்தை இசையை கேட்பதாலும் ஐந்து வயது வரை மூளையின் செயற்பாட்டு விருத்தி நன்றாக அமையும்.

# கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலம் 10 வருடங்களாக நீடிப்பு

(கொழும்பு)

கடவுச்சீட்டு (பாஸ்போட்) செல்லுபடியாகும் காலம் 5 வருடங்களிலிருந்து 10 வருடங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இந்த புதிய நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

இது தொடர்பாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பி.பி.அபேக்கோன் பொது அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

தற்போதைய நடைமுறையில் உள்ள கடவுச்சீட்டை புதுப்பிப்பதற்கென தினமும் பல நூற்றுக்கணக்கானோர் திணைக்களத்துக்கு வருகின்றனர்.

இவ்வாறு வரும் பொது மக்கள் பல சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர். இவ்வாறு வருகை தரும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு 10 வருடங்களுக்குச் செல்லுபடியாகும் கடவுச் சீட்டுகளை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

10 வருடங்களுக்குச் செல்லுபடியாகும் கடவுச் சீட்டு வழங்குவது தொடர்பாக மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

எனினும், கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு அறவிடப்படும் 500ரூபா கடவுச்சீட்டு வழங்கப்படும் கட்டணத்துடன் இணைத்துஅறவிடப்படும்.

இதன் பிரகாரம் ஒரே நாளில் கடவுச்சீட்டுப் பெற 5 ஆயிரத்து 500 ரூபாவும் வழமையான சேவையில் கடவுச் சீட்டுப் பெற 3 ஆயிரம் ரூபாவும் செலுத்தப்பட வேண்டும் என்று அந்த பொது அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# இராசி பலன்

**14.03.2006**
**(மாசி 30, செவ்வாய்க்கிழமை)**
**பூரணை பின்னிரவு 5.40 வரை**
**பூசம் முன்னிரவு 10.18 வரை**
**இராகுகாலம் 3.21-4.51மணிவரை**
**சுபநேரம் 10.51-12.21 மணிவரை**
**பூரணை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தொழில் முயற்சி, காரியதாமதம், பணவிரயம், உடல் நலக்குறை. |
| இடபம் | மனச்சஞ்சலம், காரியதாமதம், சுபசெலவு, புதியவிடயம். |
| மிதுனம் | உறவினர் வருகை, கீர்த்தி, தொழல் நன்மை, முயற்சி, பலம். |
| கடகம் | உணர்ச்சி வசப்படல், காரியதாமதம், பண விரயம், ஆரோக்கியக் குறைவு. |
| சிங்கம் | தெய்வசிந்தை, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| கன்னி | பிரயாணம், காரியதாமதம், குடும்ப சுகம், சுபசெலவு. |
| துலாம் | காரிய சித்தி, கீர்த்தி, பொருள்சேர்க்கை, உறவினர் வருகை. |
| விருச்சிகம் | அதிகாரம், நல்ல தகவல், முயற்சி பலம், உற்சாகம். |
| தனுசு | பித்தரோகம், புதிய முயற்சி, கட்டுப்பாடு, பிரயாணம். |
| மகரம் | வீண்பகை, மனப் சோர்வு, முயற்சி தாமதம், பணவிரயம். |
| கும்பம் | குடும்ப சுகம், காரியசித்தி, பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | சத்துரு ஜெயம், முயற்சிகைகூடும், சகோதரர் உதவி, போசன சுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
\- வளவன்

# மாட்டிறைச்சிக்கு தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைச் சந்தையிலுள்ள இறைச்சிக்கடைகளில் மாட்டிறைச்சிக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பறவைக் காய்ச்சல் நோய் அபாயத்தால் கோழி இறைச்சியை உண்ண அஞ்சும் மக்கள் மாட்டிறைச்சியையே அதிகமாக வாங்குகின்றனர் என்றும் இதனாலேயே மாட்டிறைச்சிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-72)

# வலம்புரத்தில் கத்தோலிக்க ஆலயம்

வலம்புரத்தில் வதியும் மக்களின் பெரும்பாலானவர்கள் கத்தோலிக்க சமயத்தை சார்ந்தவர்களாய் இருந்த போதிலும் அவர்களுக்கென வழிபடுவதற்கு இதுவரை ஒரு தேவாலயம் வலம்புரத்தில் இருக்கவில்லை.

இது காலவரையில் குரு மடத்தைச் சார்ந்த குரு மாணவர்களிற்கு சொந்தமான சூசையப்பர் ஆலயத்தையே வழிபடுவதற்கும் மற்றும் தமக்குத் தேவையான சமய சடங்குகளை நிறைவேற்றுவதற்கும் பயன்படுத்தி வந்தனர்.

தற்போது வலம்புர கத்தோலிக்க மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக யாழ் மேற்றாசன ஆண்டகை சௌந்தரநாயகம் வலம்புரத்தில் ஆலயத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இவ் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவம் எதிர்வரும் 19ஆம் திகதி சூசையப்பர் திருநாட் பலி முடிந்ததும் நடைபெற உள்ளதாக இந்த கோயில் நிர்மாணிப்பதற்கு முன்நின்று உழைத்தவர்களில் ஒருவரான நவரட்ணம் தெரிவித்துள்ளார். (து-110)

# தீவுப்பகுதிக்கு 24 மணி நேரமும் மின்சாரம்

(ஊர்காவற்றுறை)

தீவுப் பகுதிக்கான 24 மணிநேர மின்சார விநியோகம் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது தொடர்பான சம்பிரதாய நிகழ்வு ஊர்காவற்றுறை நகரில் நடைபெற்றது. இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளும் பொதுமக்களும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

முதற்கட்டமாக ஏற்கனவே மின்சார விநியோகம் வழங்கப்பட்ட ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிகளுக்கு நேற்று முன்தினம் நண்பகல் முதல் மின்சாரம் வழங்கப்பட்டது. (க-72)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்று வேலைவாய்ப்பு பெற்றவர்கள் மற்றும் வேலை வாய்ப்பை இதுவரையில் பெற்றுக் கொள்ளாதவர்கள் அனைவருக்கும் இன்று 11.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள கறியர் டொட் கொம்மில் அவசர கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

உயர் படிப்பினை எவ்வாறு மேற்கொள்வது, அதனை எந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வது என்பது தொடர்பாகஇக்கலந்துரையாடலின் போது கலந்துரையாடவுள்ளது.

எனவே, அனைவரையும் கலந்துரையாடலுக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (க)

# தமிழ் மாணவர் பேரவையின் ஸ்தாபகத் தலைவர் காலமானார்

(கிளிநொச்சி)

தமிழ் மாணவர் பேரவையின் ஸ்தாபகத் தலைவரும் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற நூலை எழுதியவருமான புஷ்பராஜா புற்றுநோய் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமரனார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஈ.பி.ஆர்.எல்.எவ` அமைப்பின் முக்கிய உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

1980ஆம்ஆண்டுகளில்வெலிக்கடை மற்றும் மட்டக்களப்புச் சிறைகளில் சிறைவாசம் அனுபவித்த இவர் பின்னர் போராட்டத்திலிருந்து விலகி பிரான்ஸில் குடும்பத்தினருடன் வசித்து வந்தார்.

ஏற்கனவே இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர் இறுதிக் காலத்தில் கல்லீரல் புற்றுநோயாலும் அவதியுற்று வந்தார்.

ஆயுதப் போராட்ட வரலாற்றை சித்தரிக்கும் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற நூலை எழுதியுள்ள இவர் ஈழப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மற்றும் சிங்கள ஆட்சியாளர்கள் எப்படியெல்லாம் தமிழர்களது உரிமைப் போராட்டத்தை காலில் போட்டு மிதித்தார்கள் என்பது குறித்த 2 நூல்களை எழுதத் திட்டமிட்டிருந்தார். (க)

# கோழிகளுக்கு தூக்கநோய்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பகுதியில் அண்மைக் காலமாக கோழிகள் சில இறந்துள்ளன.

இறந்த ஒரு கோழியை பரிசோதனை செய்த போது சாதாரண தூக்க நோய் என தெரிய வந்துள்ளது. (க-72)

# ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் ஆஸி.சாதனையை முறியடித்த தென்னாபிரிக்கா

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி வரலாற்றில் நேற்றுமுன்தினம் மறக்க முடியாத ஒருநாள். அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஒருநாள் போட்டியில் பல்வேறு சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 434 ஓட்டங்களைப் பெற்று 10 ஆண்டுகளிற்குப் பின்னர் இலங்கை அணியின் 398 ஓட்டச் சாதனையை முறியடித்ததும், ஒருநாள் சர்வதேசப் போட்டி ஒன்றில் 400 ஓட்டங்களைக் கடந்த முதலாவது அணி என்ற சாதனையும் படைத்துச் ‘சாதனைகள் முறியடிக்கப் படக் கூடியன’ என்ற யதார்த்தத்தை உணர்த்தியுள்ளது.

இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 434 ஓட்டங்களைப் பெற்று இலங்கையின் சாதனையை முறியடித்த அவுஸ்திரேலியாவின் சாதனையை அதே ஆட்டத்தில் 438 ஓட்டங்களைப் பெற்று வெறுமனே நான்கு மணித்தியாலங்களில் முறியடித்து சாதனை

**R.U.பாலமுருகன்**

படைத்தது கிரிக்கெற் விளையாட்டில் ஒரு மைல் கல் ஆகும்.

இரசிகர்களின் நெஞ்சைப் பட படக்க வைத்த இந்தப் போட்டிகள் அவர்களை ஆசனங்களின் நுனிக்கே கொண்டு வந்து விட்டது.


இந்தப் போட்டியில் நிகழ்த்திய பல்வேறு சாதனைகளின் தொகுப்பு பின்வருமாறு,




**10 ஆண்டுகளின் பின்னர் முறியடிக்கப்பட்ட சாதனை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அணி ஒன்று பெற்ற அதி கூடிய ஓட்டங்கள்.**

| அணி | எதிரணி | ஓட்டங்கள் | ஓவர்கள் | மைதானம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | அவுஸ்திரேலியா | 438-9விக் | 49.5 | ஜோகானஸ் பேர்க் | 2005/06 |
| அவுஸ்திரேலியா | தென்னாபிரிக்கா | 434-4விக் | 50 | ஜோகானஸ் போக் | 2005/06 |
| இலங்கை | கென்யா | 398-5விக் | 50 | கண்டி | 1995/96 |
| நியூசிலாந்து | சிம்பாவே | 397-5விக் | 44 | புலோபாயா | 2005/06 |
| இங்கிலாந்து | பங்களாதேஷ் | 391-4விக் | 50 | நோற்றிங்கம் | 2005 |
| இந்தியா | நியூசிலாந்து | 376 -2விக் | 50 | ஹைதராபாத் | 1999/00 |
| இந்தியா | இலங்கை | 373-6விக் | 50 | ரேயன்ரன் | 1999 |
| பாகிஸ்தான் | இலங்கை | 371-9விக் | 50 | நைரோபி | 1996/97 |









**இரண்டாவதாகக் துடுப்பெடுத்தாடி 310 ஓட்டங்களைக் கடந்து வெற்றி பெற்ற அணிகள்**

| அணி | எதிரணி | பெற்றுக்கொண்ட மொத்த ஓட்ட எண்ணிக்கை | ஓவர்கள் | மைதானம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | அவுஸ்திரேலியா | 438-9 | 49.5 | ஜோகானஸ் பேர்க் | 2005/06 |
| நியூசிலாந்து | அவுஸ்திரேலியா | 332-8 | 49 | கிறிஸ்ட்சேர்ச் | 2005/06 |
| அவுஸ்திரேலியா | தென்னாபிரிக்கா | 330-7 | 49.1 | போர்ட் எலிசபெத் | 2001/02 |
| இந்தியா | இங்கிலாந்து | 326-9 | 49.3 | வோட்ஸ் | 2002 |
| இந்தியா | மேற்கிந்திய தீவுகள் | 325-5 | 47.4 | அகமதாபாத் | 2002/03 |
| பாகிஸ்தான் | இந்தியா | 319-7 | 48 | அகமதாபாத் | 2004/05 |
| அவுஸ்திரேலியா | பாகிஸ்தான் | 316-4 | 48.5 | லாகூர் | 1998/99 |
| இந்தியா | பாகிஸ்தான் | 316-7 | 47.5 | டாக்கா | 1997/98 |
| இலங்கை | மேற்கிந்திய தீவுகள் | 313-6 | 49.3 | பிறிட்ஸ்டவுன் | 2003 |
| இலங்கை | சிம்பாவே | 313-7 | 49.2 | நியூபிலிமவுத் | 1991/92 |
| பாகிஸ்தான் | இந்தியா | 311-7 | 47 | பெஸாவார் | 2005/06 |
| தென்னாபிரிக்கா | மேற்கிந்திய தீவுகள் | 310-6 | 49.4 | ஜோகானஸ்பே | 2003/04 |

**ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றில் இரு அணிகளும் இணைந்து பெற்ற அதிகூடிய ஓட்டங்கள்**

| அணிகள் | மொத்த ஓட்டங்கள் | ஓவர்கள் | மைதானம் |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா (434-4) எதிர் தென்னாபிரிக்கா(438-9) | 872-13விக்கெட் | 99.5 | ஜோகானஸ்பேர்க் |
| இந்தியா (349-7) எதிர் பாகிஸ்தான்(344-8) | 693-15விக்கெட் | 100 | கராச்சி |
| இலங்கை (349-9) எதிர் பாகிஸ்தான்(315) | 664-19விக்கெட் | 99.4 | சிங்கப்பூர் |
| அவுஸ்திரேலியா(331-7) எதிர் நியூசிலாந்து(332-8) | 663-15விக்கெட் | 99 | கிறிஸ்ட்சேர்ச் |
| மேற்கிந்தியதீவுகள் (333-7) எதிர் இலங்கை(329) | 662-17விக்கெட் | 99.3 | சார்ஜா |
| பாகிஸ்தான்(371-9) எதிர் இலங்கை(289) | 660-19விக்கெட் | 99.5 | நைரோபி |
| தென்னாபிரிக்கா (326-3) எதிர் அவுஸ்திரரேலியா(330-7) | 656-10விக்கெட் | 99.1 | போர்த்எலிசபெத் |
| நியூசிலாந்து (349-9) எதிர் இந்தியா(306) | 655-19விக்கெட் | 97 | ராஜ்கோட் |
| இந்தியா (356-9) எதிர் பாகிஸ்தான்(298) | 654-19விக்கெட் | 94.1 | விசாகப்பட்டிணம் |
| இலங்கை (398-5) எதிர் கென்யா (254-7) | 652-12விக்கெட் | 100 | கண்டி |
| இங்கிலாந்து (325-5) எதிர் இந்தியா (326-8) | 651-13விக்கெட் | 99.3 | போட்ஸ் |

(தொடரும்...)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

20

## அணிகளின் நிலைமைகள்

### கூடிய ஓட்டத்தால் வெற்றி.....

| | | | |
|---|---|---|---|
| 256- | அவுஸ்திரேலியா | (301-6) எதிர் | நமீபியா (45) - 2002 /03 |
| 245- | இலங்கை | (299-5) எதிர் | இந்தியா (54) - 2000 /01 |
| 233- | பாகிஸ்தான் | (320-3) எதிர் | பங்களாதேஷ் (87) - 2000 |
| 232- | அவுஸ்திரேலியா | (323-2) எதிர் | இலங்கை (91) - 1984 /85 |
| 224- | அவுஸ்திரேலியா | (332-5) எதிர் | பாகிஸ்தான் (1-8) - 2002 |
| 217- | பாகிஸ்தான் | (295-6) எதிர் | இலங்கை (78) - 2001/02 |
| 210- | நியூஸிலாந்து | (347-4) எதிர் | அமெரிக்கா (137) - 2004 |
| 209- | தென்ஆபிரிக்கா | (263-4) எதிர் | மேற்இந்தியா (54) - 2003 /04 |
| 208- | தென்ஆபிரிக்கா | (354-3) எதிர் | கென்யா (154) - 2001/02 |
| 208- | அவுஸ்திரேலியா | (359-5) எதிர் | இந்தியா (151) - 2003 /04 |

### அதிக விக்கெற்றால் வெற்றி.....

| | | | |
|---|---|---|---|
| 10 விக்கெற் - | இந்தியா | (123-0) எதிர் | கிழக்கு ஆபிரிக்கா (120) - 1975 |
| 10 விக்கெற் - | நியூஸிலாந்து | (113-0) எதிர் | இந்தியா (112-9) - 1980 /81 |
| 10 விக்கெற் - | மேற்இந்தியா | (172-0) எதிர் | சிம்பாவ்வே (171) - 1983 |
| 10 விக்கெற் - | இந்தியா | (97) எதிர் | இலங்கை (96) - 1983 /84 |
| 10 விக்கெற் - | மேற்இந்தியா | (117-0) எதிர் | நியூஸிலாந்து (116) - 1984 /85 |
| 10 விக்கெற் - | பாகிஸ்தான் | (66-0) எதிர் | நியூஸிலாந்து (64) - 1985 /86 |
| 10 விக்கெற் - | மேற்இந்தியா | (192-0) எதிர் | நியூஸிலாந்து (97-9) - 1986 /87 |
| 10 விக்கெற் - | மேற்இந்தியா | (221-0) எதிர் | பாகிஸ்தான் (220-2) - 1991/92 |
| 10 விக்கெற் - | இலங்கை | (89-0) எதிர் | இங்கிலாந்து (88) - 2003 /04 |
| 10 விக்கெற் - | இலங்கை | (191-0) எதிர் | பங்களாதேஷ் (190-9) - 2004 |
| 10 விக்கெற் - | இங்கிலாந்து | (192-0) எதிர் | பங்களாதேஷ் (190) - 2005 |
| 10 விக்கெற் - | அவுஸ்திரேலியா | (140) எதிர் | பங்களாதேஷ் - 2005 |
| 10 விக்கெற்- | தென்ஆபிரிக்கா | (189-0) எதிர் | இந்தியா (188) - 2005 /06 |

### இரண்டாவது இனிங்ஸில் அதிக ஓட்டங்கள் / வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 332-8 | (49) | நியூஸிலாந்து | எதிர் | அவுஸ்திரேலியா - 2005 / 06 |
| 330-7 | (49.1) | அவுஸ்திரேலியா | எதிர் | தென்ஆபிரிக்கா - 2001 / 02 |
| 326-8 | (49.3) | இந்தியா | எதிர் | இங்கிலாந்து - 2002 |
| 325-5 | (47.4) | இந்தியா | எதிர் | மேற்இந்தியா - 2002 /03 |
| 319-7 | (48) | பாகிஸ்தான் | எதிர் | இந்தியா - 2004 /05 |
| 316-4 | (48.5) | அவுஸ்திரேலியா | எதிர் | பாகிஸ்தான் - 1998 /99 |
| 316-5 | (47.5) | இந்தியா | எதிர் | பாகிஸ்தான் - 1997 /98 |
| 313-6 | (49.3) | இலங்கை | எதிர் | மேற்இந்தியா - 2003 |
| 313-7 | (49.2) | இலங்கை | எதிர் | சிம்பாப்வே - 1991 /92 |
| 311-7 | (47) | பாகிஸ்தான் | எதிர் | இந்தியா - 2005 /06 |
| 310-6 | (49.4) | தென்ஆபிரிக்கா | எதிர் | மேற்இந்தியா - 2003 /04 |
| 306-5 | (47.2) | இங்கிலாந்து | எதிர் | பாகிஸ்தான் - 2000 /01 |

### இரண்டாவது இனிங்ஸில். அதிக ஓட்டங்கள் / தோல்வி

| | | | | |
|---|---|---|---|---|
| 344-8 | (50) | பாகிஸ்தான் | எதிர் | இந்தியா - 2003 / 04 |
| 329 | (49.3) | இலங்கை | எதிர் | மேற்இந்தியா - 1995 / 96 |
| 320 | (49.5) | நியூஸிலாந்து | எதிர் | அவுஸ்திரேலியா - 2005 / 06 |
| 317 | (48.4) | இந்தியா | எதிர் | பாகிஸ்தான் - 2003 /04 |
| 315 | (49.4) | பாகிஸ்தான் | எதிர் | இலங்கை - 1995 /96 |
| 310 | (48.5) | இந்தியா | எதிர் | தென்ஆபிரிக்கா - 1999 /00 |
| 306 | (47) | இந்தியா | எதிர் | நியூஸிலாந்து - 1999 /00 |
| 304-8 | (50) | இங்கிலாந்து | எதிர் | தென்ஆபிரிக்கா - 2004/ 05 |
| 303 | (49.3) | பாகிஸ்தான் | எதிர் | நியூஸிலாந்து - 2003 /04 |
| 301-6 | (50) | சிம்பாப்வே | எதிர் | அவுஸ்திரேலியா - 2000 /01 |
| 301 | (49.3) | இலங்கை | எதிர் | இந்தியா - 1998 |
| 301-9 | (50) | நியூஸிலாந்து | எதிர் | அவுஸ்திரேலியா - 1999 /00 |
| 300-7 | (5Q) | இந்தியா | எதிர் | இலங்கை - 1997 |

### தொடர்ச்சியான வெற்றி

| | | | |
|---|---|---|---|
| 21- | அவுஸ்திரேலியா | ஹோபார்ட் 11.01.2003 - | போர்ட் ஓவ் ஸ்பெய்ன் 24.05.2003 |
| 12- | தென்ஆபிரிக்கா | செஞ்சூரியன் 13.02.2005 - | போர்ட் எலிசபேத் 30.10.2005 |
| 11- | மேற்இந்தியா | லோர்ட்ஸ் 04.01.1984 - | போர்த் 02.05.1985 |
| 10- | அவுஸ்திரேலியா | மெல்போர்ண் 23.02.1990 - | சார்ஜா 02.05.1990 |
| 10- | அவுஸ்திரேலியா | மெல்போர்ண் 11.01.2001 - | மெல்போர்ண் 09.02.2001 |
| 10- | பாகிஸ்தான் | சார்ஜா 27.04.1990 - | முல்தான் 13.11.1990 |
| 10- | தென்ஆபிரிக்கா | ஜோனெஸ்பேர்க் 13.01.1996 - | ராவல்பிண்டி .05.03.1996 |
| 10- | தென்ஆபிரிக்கா | பினோனி 22.10.2000 - | பிலோம் பொண்ரெய்ன் 14.01.2001 |
| 10- | இலங்கை | கொழும்பு (SSC) 29.02.2004 - | கொழும்பு (RPS) 23.06.2004 |
| 10- | மேற்இந்தியா | ராஜ்கோட் 05.01.1998 - | ஜோர்ஜ் ரவுண் 30.03.1988 |

## என்னப்பா இதற்கு முடிவில்லையா?


### (முத்தையா முரளிதரன்)



சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் ஆயிரம் விக்கெற்றுக்களை வீழ்த்தி சாதனை நிலைநாட்டிய இலங்கையின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தனது 600ஆவது விக்கெற்றினை பூர்த்தி செய்தார்.

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கலித் மசூத்தின் விக்கெற்றினை வீழ்த்தியதன் மூலம் அரிய மைல் கல்லினை முரளிதரன் எட்டிப்பிடித்தார்.

101 ஆவது டெஸ்ட் போட்டியில்



விளையாடிய 33 வயதுடைய முரளிதரன் 659 டெஸ்ட் விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ள அவுஸ்திரேலியாவின் ஷேன் வோணுக்கு அடுத்த படியாக 600 விக்கெற்றினை நிறைவு செய்த இரண்டாவது வீரர் என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டார்.

### முரளியின் சாதனைப் பயணம்

*1992 - அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார்.

*1995 - பந்தை எறிகிறார் என அவுஸ்திரேலிய நடுவர் டேரல் ஹேரால் குற்றம் சாட்டப்பட்டார்.

*1997 - நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது 100ஆவது விக்கெற்றினை வீழ்த்தினார்.

*1998 - இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் தனது 200ஆவது டெஸ்ட் விக்கெற்றினைப் பதிவு செய்தார்.

மீண்டும் பந்தை எறிகிறார் என குற்றம் சாட்டப்பட்டார். பரிசோதனைகளின் முடிவில் பிறப்பில் இருந்த குறைபாடு காரணமாகவே அவரது பந்து வீச்சு முறை சந்தேகங்களைஏற்படுத்தியதுஎனதெரியவந்தது.

*1999 - ஆண்டின் சிறந்த ஐந்து வீரர்களுள் ஒருவராக விஸ்டன் இவரைத் தெரிவு செய்தது.

*2000 - தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் தனது 300 ஆவது விக்கெற்றினை வீழ்த்தினார்.

*2002 - தனது 72ஆவது டெஸ்ட் போட்டியில் 400 விக்கெற் வீழ்த்தியதன் மூலம் குறைந்த வயது மற்றும் குறைந்த போட்டிகளில் இச்சாதனை நிகழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

*2004 - கண்டி நகரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது 500 ஆவது விக்கெற்றினை நிறைவு செய்தார்.

இப்பட்டியலில் ஷேன் வோண் கொட்னி வோல்ஷ் இவர்களைத் தொடர்ந்து மூன்றாவது வீரராக இணைந்தார். இவரது தூஸ்ரா பற்றி மீண்டும் சந்தேகம் ஐ.ஸீ.ஸி.யின் ரெப்ரி கிரிஸ் பிராட் சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது 521 டெஸ்ட் விக்கெற்றினை நிறைவு செய்து டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெற்றுக்கள் வீழ்த்தியவர்கள் வரிசையில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறினார்.

*2006 - பங்களாதேஷுக்கு எதிராக போக்ராவில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் காலித் மசூதை ஆட்டமிழக்கச் செய்து தனது 600ஆவது விக்கெற்றினைப் பூர்த்தி செய்தார்.

### இரண்டாவது வீரர்

| வீரர் | போட்டி | விக்கெற் |
|---|---|---|
| ஷேண்வோண் (அவுஸ்) | 135 | 659 |
| முத்தையா முரளிதரன் (இல) | 101 | 600 |
| கிளென்மெக்ரா (அவுஸ்) | 119 | 542 |
| ஹொட்னி வோல்ஷ் (மே.இ) | 132 | 519 |
| அனில்கும்ளே (இந்) | | 500 |

### எதிரணிக்கு எதிராக...

| எதிரணி | போட்டி | விக்கெற் |
|---|---|---|
| அவுஸ் | 11 | 55 |
| இங் | 10 | 69 |
| இந் | 15 | 67 |
| பங் | 06 | 50 |
| நியூ | 10 | 52 |
| பாக் | 12 | 68 |
| தென்.ஆபி | 13 | 82 |
| மேற்இந் | 10 | 70 |
| சிம் | 14 | 87 |

### 600 விக்கெற் முன்னேற்றம்

| விக் | போ | சரா | 5/10 விக் |
|---|---|---|---|
| 100 | 27 | 31.49 | 6/0 |
| 200 | 42 | 26.90 | 16/2 |
| 300 | 58 | 25.17 | 24/5 |
| 400 | 72 | 23.53 | 33/10 |
| 500 | 87 | 22.89 | 42/13 |
| 600 | 101 | 22.35 | 50/14 |

### நோயல்

### பங்குபற்றிய போட்டியின்

| | விக் | சரா | 5/10 விக் |
|---|---|---|---|
| முதல் 50 போட்டி | 245 | 26.36 | 18/3 |
| இறுதி 51 போட்டி | 355 | 19.58 | 32/11 |

(அடுத்தவாரம் தொடரும்...)

## பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியில்
# தீவிரவாதத்தை ஒடுக்க தவறியவர் அத்வானி
### உமாபாரதி குற்றச்சாட்டு

பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியில் தீவிரவாதத்தை ஒடுக்கத்தவறியவர் அத்வானி என்று உமாபாரதி குற்றம் சாட்டியுள்ளார்.

காசி தொடர் குண்டு வெடிப்பில் 20 பேர் பலியான சம்பவத்தைக் கண்டித்து நாடு முழுவதும் தேச ஒற்றுமை பயணம் நடத்தப் போவதாக பா.ஜனதா மூத்த தலைவர் அத்வானி அறிவித்துள்ளார்.

இந்நிலையில் பாரதிய ஜனதாவில் இருந்து வெளியேற்றப்பட்ட மத்திய பிரதேச முன்னாள் முதல் மந்திரி உமாபாரதி அத்வானியின் அறிவிப்பை விமர்சித்து உள்ளார். இது தொடர்பாக உமாபாரதி கூறுகையில்,

நம் நாட்டு தலைவர்கள் சிலர் ஆட்சியில் இருக்கும் போது ஒரு மாதிரியும் ஆட்சியில் இல்லாத போது வேறு மாதிரியும் பேசுகிறார்கள். இத்தகைய இரட்டை அணுகுமுறையை பின்பற்றும் தலைவர்களால் நாட்டின் முன்னேற்றத்துக்கு எதுவும் செய்ய முடியாது.

பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியில் உட்துறை மந்திரியாக அத்வானி இருந்தார். அப்போது அவர் தீவிரவாதத்தை ஒடுக்க கடுமையான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஆனால் தீவிரவாதத்தை ஒடுக்குவது பற்றி அவர் இப்போது பேசுகிறார்.

தலைவர்களால் தீவிரவாதத்தை ஒடுக்க முடியாது. மக்களின் ஒற்றுமையால் மட்டுமே தீவீரவாதத்தை ஒடுக்க முடியும். காசி குண்டு வெடிப்பில் ஏற்பட்ட உயிரிழப்பால் நான் பெரிதும் வேதனை அடைந்தேன் என்றார். (து)

இந்திய வலம்


இந்தியா வந்துள்ள பின்லாந்து பிரதமரை வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஆனந்த் சர்மா வரவேற்றார்.


போபாலில் நடந்த பத்திரிக்கைத்துறையில் பெண்களின் பங்கு பற்றிய தேசிய கருத்தரங்கில் மத்தியபிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌகான் பேசினார்.

# தி.மு.க-இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சமரச உடன்பாடு
### விரும்பிய 10 தொகுதிகள் கிடைக்கும்

(சென்னை)

தி.மு.க.கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கட்யூனிஸ்டுக்கு 13 இடங்கள் கொடுத்திருப்பதன் மூலம் கம்யூனிஸ்டுகளிடையே தி.மு.க ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தி விட்டதாக அவர்கள் கருதினார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக்கு இணையாக தங்களுக்கும் கூடுதல் தொகுதிகள் தர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு தலைவர்கள் போர்க்கொடி உயர்த்தினார்கள். ஆனால் இதை தி.மு.க ஏற்கவில்லை. கூட்டணிக்காக ஏற்கனவே நிறைய இடங்களை தியாகம் செய்து விட்ட தாக தி.மு.க தரப்பில் தெரிவிக் கப்பட்டது.

இதையடுத்து இந்திய கம்யூனிஸ்டு கட்சி செயற்குழு சென்னையில் கூடி விவாதித்தது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர்தா.பாண்டியன், பழனிச்சாமி, எம்.எல்.ஏ மகேந்திரன் உட்பட பலர் தி.மு.கவிடம் ஓரிரு இடங்களாவது கூடுதலாக பெற்று விட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

இந்திய கம்யூனிஸ்டு முன்னாள் மாநில செயலாளர் நல்லக்கண்ணு உள்ளிட்ட சில மூத்த தலைவர்கள் தி.மு.காவுக்கு நெருக்கடி ஏற்படுத்தி கூடுதலாக ஓரிரு இடங்கள் பெறுவதை விரும்பவில்லை. அவர்கள் செயற்குழு உறுப்பினர்களை சமரசம் செய்தனர்.


கூடுதல் தொகுதிகள் கேட்பதை விட வெற்றி வாய்ப்புள்ள 10 தொகுதிகள் மற்றும் மேல் சபை எம்.பி பதவியை கேட்டு உறுதி செய்யலாம் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. இதை பெரும்பாலான செயற்குழு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இதையடுத்து தி.மு.க தலைவர்கள் கருணாநிதியை இவர்கள் சந்தித்த போது மேல் சபை எம்.பி பதவியை பெறுவதில் எழுத்துபூர்வமாக ஒப்பந்தம் செய்தால் பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் அதுபற்றி இந்திய கம்யூனிஸ்டு தலைவர்கள் வலியுறுத்தவில்லை என்று தெரிகிறது. விரும்பும் 10 தொகுதிகளை பெறுவதில் அவர்கள் கவனம் செலுத்தினார்கள். அதை தி.மு.க ஏற்றுக் கொண்டது.

கூட்டணி கட்சிகளுக்கு அதிக இடங்களை பகிர்ந்து கொடுத்து விட்டோம். எனவே அடுத்த வாய்ப்பின் போது இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு மேலும் என்னென்ன செய்யமுடியுமோ அதை கண்டிப்பாக செய்வோம் என்று தி.மு.க தரப்பில் உறுதிமொழி வழங்கப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சி மானாமதுரை, திருத்துறைப்பூண்டி, பொன்னேரி, நாங்குநேரி, மன்னார் குடி, திருப்பூர், பொருந்துறை, நன்னிலம், அரூர், அம்பாசமுத்திரம் ஆகிய 10 தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரி வித்துள்ளது. இதை உறுதி செய்து இன்னும் ஓரிரு தினங்களில் தி.மு .க அறிவிக்கும் என்று இந்திய கம்யூனிஸ்டு எதிர்பார்க்கிறது. (து)

### 3500 ஆண்டுகள் பழமை வாய்ந்த
# பட்டுப் போன மாமரம் மீண்டும் வளர ஆரம்பித்தது



காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலில் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மாமரம் பட்டுப்போய் மீண்டும் புத்துயிர் பெற்று பச்சைப்பசேல் என்று வளர்ந்து வருகிறது. பட்டுப்போன மரத்தை மீண்டும் சீரமைக்க முதல் அமைச்சர் ஜெயலலிதா எடுத்த முயற்சி வெற்றி பெற்றது.

உலக பிரசித்தி பெற்ற காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் காஞ்சிபுரம் பஸ் நிலையத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இத்திருக்கோவில் அமைந்துள்ள இடத்திற்கு சிவகாஞ்சி என்ற சிறப்பு பெயர் உண்டு.

இக்கோயிலின் உட்பிரகாரத்தில் உள்ள மாமரத்தின் வயது 3500 வருடங்களுக்கு மேலாகும். இம்மரத்தில் 4 கிளைகளில் நான்கு விதமான ருசியும் (இனிப்பு, துவர்ப்பு, கசப்பு, புளிப்பு) 4 உருவ வடிவமான மாங்கனியும் கொடுத்து வந்தன. ஏகாம்பரம் என்பதற்கு ஒரே மாமரம் என்று பெயர். இக்கோவிலின் ஸ்தல விருட்சம் மாமரம். காமாட்சியம்மை தவம் செய்து ஈஸ்வரனை கல்யாணம் செய்த புண்ணிய இடம் என்பது ஐதீகம். இந்த புண்ணிய இடத்தில் மாமரம் அருகே பல ஆண்டுகளாக திருமணங்கள் நடந்து வந்து கொண்டிருக்கின்றன. (க)

## நேர்மைத்திறன் வேண்டும்
# வெங்கையா நாயுடு புத்திமதி

(பெங்களூர்)

கேரளா, புதுச்சேரி தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை இழந்து விடும் என்று வெங்கையா நாயுடு கூறினார்.

கர்நாடகத்தில் பாரதிய ஜனதா கட்சியை பலப்படுத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் பெங்களூர் மல்லேசுவரத்தில் நடந்தது. அகில இந்திய பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு இந்த ஆலோசனை கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

அக்கூட்டத்தில் வெங்கையா நாயுடு தெடர்ந்து பேசுகையில்,

கர்நாடகத்தில் ஜனதா தளம் (எஸ்) பாரதிய ஜனதா சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. மந்திரிகள் மக்களிடம் அன்புடன் பழக வேண்டும். எளிமையாக இருக்க வேண்டும் . நீதி, நேர்மையுடன் பணி செய்ய வேண்டும். கட்சி தொண்டர்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும் . பத்திரி கையாளரிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் . மக்களிடம் சொல்லும் உறுதி மொழிகளை நிறைவேற்ற வேண்டும். எல்லா எம்.எல் . ஏக்களுக்கும் மந்திரி பதவி கொடுக்க முடியாது . எல்லா மந்திரிகளுக்கும் முதல் மந்திரி பதவி கொடுக்க முடியாது . அனைவருக்கும் வாரிய தலைவர் பதவி கொடுக்க இயலாது. இதை கட்சியினர் புரிந்து கொண்டு ஒற்றுமையாக இருக்க வேண்டும். (து)

# ஸ்ரீநகரின் மசூதிக்கு தீ வைக்க முயற்சி
### புனித குரான் சேதம்

(ஸ்ரீநகர்)

ஸ்ரீநகரில் உள்ள புகழ் பெற்ற மசூதிக்குள் மர்ம ஆசாமிகள் புகுந்து புனித குரானை சேதப்படுத்தி மசூதிக்கு தீ வைத்தனர். இதைக் கண்டித்தும் குற்றவாளிகளை கைது செய்ய வலியுறுத்தியும் ஆயிரக்கணக்கான பொது மக்கள் மறியல் செய்தனர்.

ஸ்ரீநகரின் பர்சூல்லா பகுதியில் உள்ள ஹபீப் காலனியில் புகழ்பெற்ற அபு பக்கர் மசூதி அமைந்துள்ளது.

இந்த மசூதிக்குள் கடந்த சனிக்கிழமை இரவு சில மர்ம ஆசாமிகள் புகுந்து அங்கிருந்த புனித குரானை சேதப்படுத்தி மசூதிக்கு தீ வைத்து விட்டு ஓடி விட்டனர்.

நேற்று முன்தினம் காலையில் வழக்கம் போல தொழுகைக்கான அழைப்பு விடுக்க மசூதிக்கு இமாம் சென்ற போது புனித குரான் கிழிக்கப்பட்டு தரை முழுவதும் வீசி எறியப்பட்டும் மசூதியில் இருந்த பல பொருட்கள் தீயில் எரிந்தும் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து உடனடியாக ஒலிபெருக்கி மூலம் அறிவித்தார்.

உடனே அந்தப் பகுதியில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் ஆவேசத்துடன் மசூதிக்குச் சென்று அங்கு அட்டூழியம் செய்தவர்களை கைது செய்யுமாறு கோரி ஸ்ரீநகர் விமான நிலையம் செல்லும் சாலையில் மறியல் செய்தனர். (து)


திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மாசித் தேரோட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

முருகப் பெருமானின் ஆறு படை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மாசித் திருவிழா மார்ச் 3இல் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

மாசித்திருவிழாவின் 10ஆம் திருநாளான நேற்று முன்தினம் தேரோட்டம் நடந்தது.



# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை



78 மீள்பார்வை

### டாக்டர் பட்டம்

டி.எஸ்.என்: 1984இல் இந்திய அரசாங்கம் உங்களுக்கு பத்மபூஷண விருது கொடுத்து கௌரவித்தது. தொடர்ந்து 1986இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உங்களுக்கு ஒரு டாக்டர் பட்டம் தந்து கௌரவித்தது. இதைப் பற்றி...



'டாக்டர்' பட்டம் பெற்ற போது...

சிவாஜி: இரண்டு கௌரவங்கள் பெற்றபோதும், மிகவும் சந்தோஷமாக இருந்தது. பத்தமபூஷண பட்டம் நான் ஒரு சிறந்த இந்தியப் பிரஜை என்பதற்காகத் தரப்பட்டது.

அந்த கௌரவமான விருதை அப்போதிருந்த ஜனாதிபதி, ஜெயில்சிங் அவர்களிடமிருந்து நான் பெற்றுக்கொண்டேன். டாக்டரேட்டைப் பற்றி பலர் சொல்லுவார்கள். ஆனால் அதைப் பற்றிய முழுமையான விபரங்கள் எனக்கு அப்போது தெரியாது. ஒரு துறையில் யார் திறமையாகச் செயல்பட்டு, வெற்றியுடனும், சிறப்புடனும் விளங்குகிறார்களோ , அவர்களுக்குத் தான் டாக்டர் பட்டம் கொடுப்பார்கள் என்று பின்னால் தெரிந்துகொண்டேன்.

நான் மிகத் திறமையாக நடித்திருக்கிறேனென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் நினைத்தார்கள் போலிருக்கிறது. எனது நண்பர் எம்.ஏ.எம்.ராமசாமி அவர்களும் இதுபற்றி சிந்தித்துள்ளார்கள். அவரும் இதற்காக முயற்சி செய்தார். அதனால் தான் என்னை அழைத்து டாக்டர் பட்டம் கொடுத்தார்கள். இதைப் பெற்றதில் நான் பெருமையும், மகிழ்ச்சியும் அடைந்தேன்.

### *என்னை நேசித்த எம்.ஜி.ஆர்*

டி.எஸ்.என்: உங்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் பார்த்துக் கொண்டு வரும்போது, உங்களுக்கு மகிழ்ச்சி கொடுக்கும் ஒரு சம்பவம் நடந்தால், அதைத் தொடர்ந்து ஒரு துக்ககரமான நிகழ்ச்சி நடந்து கொண்டு வருகிறது. நீங்கள் டாக்டர் பட்டம் பெற்றதற்கு அடுத்த ஆண்டு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இறந்துவிட்டார்கள். அது உங்களை மிகவும் பாதித்திருக்குமே...

சிவாஜி: சின்னப் பிள்ளையிலிருந்தே எம்.ஜி.ஆரும் நானும் நெருங்கிய நண்பர்கள். என் வீட்டிற்கு அவர் வருவதும், அவர் வீட்டிற்கு நான் செல்வதும் , என் தாயார் கையால் அவர் சாப்பிடுவதும், அவர் தாயார் கையால் நான் சாப்பிடுவதும் சகஜம். ஒரு கதை மாதிரி எங்கள் நட்பின் வரலாற்றை சொல்கிறேன். இரண்டாம் உலகப்போர் முடிந்த சமயம், 1943-44இல் நான் சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கத்திலுள்ள, ஒற்றைவாடா தியேட்டர் அருகில் தான் குடியிருந்தேன்.



எம்.ஜி.ஆர்.- ராஜாமணியம்மாள்- சிவாஜி

'லக்ஷ்மிகாந்தன்' நாடகமெல்லாம் நடத்தினோமே அந்த நேரத்தில் எனது வீட்டுக்குப் பக்கத்தில் தான் எம்.ஜி.ஆர், அவரது தாயார், சகோதரர் எம்.ஜி.சக்கரபாணி ஆகியோர் குடியிருந்தனர். அப்போதுதான் எம்.ஜி.ஆர் அவர்கள் சினிமாவில் நடிக்க ஆரம்பித்தார்கள்.

நானும் என்னுடைய நண்பர் காகா ராதாகிருஷ்ணனும் அவர் வீட்டுக்கு அடிக்கடி செல்வோம். அநேகமாக சாப்பாட்டு நேரத்தில் அங்கேயே இருப்போம். எம்.ஜி.ஆர் 'பசிக்கிறது' என்றாலும் 'இருப்பா கணேசன் வரட்டும்' என்பார்கள் அவருடைய அம்மா. அந்த அளவுக்கு அவர்களுக்கு என் மேல் பாசம். எம்.ஜி.ஆர்.அவர்கள் இரவு நேரத்தில் என்னையும் ராதா கிருஷ்ணனையும் டவுனுக்குப் பக்கத்தில் உள்ள தியேட்டருக்கு சினிமா பார்க்கக் கூட்டிச் செல்வார். திரும்பி வரும்போது சப்பாத்தி, பால் போன்றவைகளைச் சாப்பிடுவோம். எல்லோருக்கும் அவர்தான் செலவு செய்வார். அதுபோல நீண்ட நாட்கள் இருந்தோம். பிறகு நான் காஞ்சிபுரம் சென்று அண்ணாவுடன் சேர்ந்து விட்டேன். 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' என்ற நாடகத்தில் முதலில் எம்.ஜி.ஆர். நடிப்பதாக இருந்தது. அவர் என்ன காரணத் தினாலோ நடிக்கவில்லை. அண்ணா என்னைத் தேர்ந்தெடுத்தார். நான் நடித்தேன். மறுபடியும் எங்களுக்குள் பிரிவு ஏற்பட்டது. சில வருடங்கள் கழித்து நான் சினிமாவில் சேரும்போது, எம்.ஜி.ஆரைச் சந்தித்தேன்.



ஜெயலலிதாவுடன்....

ஒரே காலகட்டத்தில் இருவரும் திரைப்படங்களில் நடித் துக் கொண்டிருந்தோம். அதேசமயத்தில் இருவரும் அரசியலிலும் ஈடுபட்டிருந்தோம்.

'ஒரே உறையில் இரண்டு கத்திகள் இருக்க முடியுமா?' நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் இருந்தால், இருவருக் கும் ஒரே ரசிகர்கள்தான் இருப்பார்கள். நாங்கள் இருவரும் தனித்தனியே செயல்பட்டதால் அவருக்கு வேறு ரசிகர்கள் எனக்கு வேறு ரசிகர்கள் இருந்தார்கள்.

என்னை அவர் விமர்சிப்பார். அவரை நான் விமர்சிப்பேன். அது அரசியல் பற்றித்தான். பர்ஸனலாக ஒன்றுமில்லை. பலர் இதை வைத்துக் கொண்டு நாங்கள் இருவரும் விரோதிகள் என்று பேசிக் கொண்டார்கள். அதைப் பற்றி நாங்கள் இருவருமே கவலைப்படவில்லை.பல வருடங்கள் சென்றபின் அவர் முதல் மந்திரியானார். அவர் பதவியிலிருந்தபோது, பல முறை நான் சந்தித்திருக்கிறேன். அவரும் பல சம்பவங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் வந்திருக்கிறார். அவர் கையால் அவார்டுகள் வாங்கியிருக்கிறேன். எனக்கும் அவருக்கும் உள்ள நட்பு என்றும் மாறவில்லை.எனக்கு மெட்ராஸில் ஒரு தோட்டமிருக்கிறது. அதுவும் எம்.ஜி.ஆரின் தோட்டத்திற்குப் பக்கத்திலேயே இருக்கிறது. என் தாயார் மறைந்த பிறகு அவர்கள் நினைவாக என் தோட்டத்தில் , என் தாயாரின் உருவச் சிலையைத் திறப்பதற்கு வரவேண்டுமென்று, எம்.ஜி.ஆர்க்குச் சொல்லியனுப்பினேன். உடனே ஒத்துக் கொண்டு தன் மனைவியுடன் வந்து எனது தாயார் சிலையைத் திறந்து வைத்தார்.

(தொடரும்)



## தவக்கால சிந்தனை


**தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுளாம்**
**நான் அருளும் மீட்பைக் கண்டடைவர்**

சொல்லுதல் யாருக்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் என்றார் வள்ளுவர். கடவுளின் சட்டம் மோசே வழியாக மக்களுக்கு வழங்கப்பட்டது. காலச் சுழற்சியில் வழிவழியாய் வந்த சட்ட வல்லுநர்களும் பரிசேயர்களும். சட்டத்தின் காவல்களாக தங்களை தாங்களே நியமித்துக்கொண்டதுடன் மக்களின் மேல் தங்கள் போதனைகள் வழியாக பெருஞ்சுமைகளை சுமத்தினார்களே அன்றி அதனைத் தம் வாழ்வாக்கிக் கொள்வதில் அக்கறை கொண்டவர்கள் அல்ல! வாழ்வைக் கற்க நிறை தகுதி கொண்ட இயேசுவோ தான் வாழ்வதையே கற்பித்தார். தான் கற்பித்ததை நிறைவாக வாழ்ந்து காட்டினார். தாழ்ச்சியும் நன்மைத்தனமும் சகோதரத்துவ அன்பும் நேர்மையும் இயேசுவின் போதனைகளில் மட்டுமல்ல அவரது ஆளுமையின் வெளிப்பாடாகின. அவரின் வழிநடக்கும் நாமும் அவரது ஆளுமையில் பங்கு பெறுவோம். மற்றவரில் குறை காண்பதில் அல்ல- நம்வாழ்வில் வாழ்ந்து காட்டுவோம்.

காவலன்

## சுனாமியால் பாதிப்புற்ற ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் த.மகாசிவம் தலைமையில் நடைபெற்றது.



இதில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வ.கணேசமூர்த்தி, சர்வதேச கல்வியக சுனாமி மீள்நிர்மாண இணைப்பாளர் பஸில் டி.சில்வா, மேற்படி சங்கத்தின் பயிற்சி இணைப்பாளர் த.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களது குடும்பத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்கு 10ஆயிரம் ரூபா , சொத்துச் சேதங்களுக்கு 4ஆயிரம் ரூபாவும் பகுதிச் சேதங்களுக்கு 2ஆயிரம் ரூபாவும் நிவாரணமாக வழங்கப்பட்டது.

இக் கொடுப்பனவுகளை சென்.மேரிஸ் மகளிர் பாடசாலையைச் சேர்ந்த க.விமலநாதன், ஜோ.எட்வின், பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.அமிர்தலிங்கம், எஸ்.சுதர்சன், கி.அம்பிக்குமார், சக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஜோசப் யேசுராசா, தீவக வலயத்தைச் சேர்ந்த திருமதி தனிஸ் லோகேஸ், புனித சென் சார்ஸ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி ஏ.ஆர். ஜோன் ஜெயகுமார் , திருக்குடும்ப கன்னியர்மடத்தைச் சேர்ந்த திருமதி மேரி பஸில்றா பொலிசியன், சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த திருமதி ப.மகேஸ்வரன், கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி சகுந்தலா கனகராஜா , நல்லூர் தெற்கு விக்னேஸ்வரி வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.விமல்நாதன் ஆகியோருக்கே இந் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த த சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசரியர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவாக வழங்குவதற்கு வெளிநாட்டு ஆசிரிய சங்கங்களினால் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு 32 இலட்சத்து 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்களுக்கு 1 இலட்சத்து 52 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

திணைக்களத்திலிருந்து முற்பண உதவியோ, வங்கி உதவியோ, வேறு அரச உதவிகளோ கிடைக்காத நிலையில் தவித்துக் கொண்டிருந்த தமிழ் ஆசிரியர்களுக்கு, தமிழர் ஆசிரியர் சங்கம் உதவ முன்வந்ததற்கு எந்த வகையில் நன்றி தெரிவிப்பதென்று தெரியவில்லை என நிவாரண உதவி பெற்ற யாழ்.சென்ஜேம்ஸ் மகளிர் கல்லூரி ஆசிரியரான க. விமலநாதன் தெரிவித்துள்ளார்.

(து-133)

## உல்லாசப் பயணிகளைக் கவர விசேட ஊக்குவிப்புத் திட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கு உல்லாசப் பயணிகளை கூடுதலாகக் கவரும் முகமாக விசேட ஊக்குவிப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த ஆண்டில் இலங்கைக்கு சுமார் 6 இலட்சம் உல்லாசப் பயணிகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதத்தில் ஏறத்தாழ 52 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தார்கள். இந்நிலையில் பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளை இலக்கு வைத்து பல்வேறு சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்த நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளுக்கு 30சதவீத விலைக்கழிவில் விமான பயணச் சீட்டுக்களை வழங்குவதற்கு இலங்கை சுற்றுலாச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்படும் இந்த சலுகை மே மாதம் வரை அமுலில் இருக்கும். அத்துடன் இவர்களின் வருகையை முன்னிட்டு மேலதிக ஹோட்டல் வசதிகளும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.

(க-9)

# ஆப்கானிஸ்தானில் கார்க்குண்டுத் தாக்குதல்!

## அதிர்ஷ்ட வசமாக உயிர்பிழைத்தார் முன்னாள் ஜனாதிபதி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில், தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு, வெளிநாட்டு படை வீரர்களையும், அரசு அதிகாரிகளையும் குறி வைத்து தலிபான்கள் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். கடந்த ஆண்டு தலிபான்கள் தாக்குதலில் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி மொஜாதிதி காபூல் நகரில் அவரது வீட்டில் இருந்து காரில் புறப்பட்டு நெரிசல் மிகுந்த சாலையில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது வேறொரு காரில் குண்டுகளுடன் வந்த தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவர் அவர் கார் மீது மோதி தாக்குதல் நடத்த முயன்றார்.

இந்தத் தாக்குதலில் மொஜாதிதி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

ஆனால் குண்டுவெடித்ததில் தீவிரவாதி உடல் சிதறி பலியானார். இந்த தற்கொலைப் படைத்தாக்குதலில் ஒரு பாதசாரியும் பலியானார்.

இந்தத் தாக்குதலுக்கு அல் - கெய்தா தீவிரவாதிகளே காரணம் என்று பொலிஸார் கருதுகிறார்கள். (கு)

# கொலம்பியாவில் கண்ணி வெடியில் சிக்கி 9 பேர் பலி, பலர் காயம்

(பகோடா)

கொலம்பியா நாட்டில் புதிய பாராளுமன்றத்தைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு நேற்று 13ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெற்றது.

இந்நிலையில் அங்கு தலைமறைவாக இருந்த தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் மீது கண்ணிவெடி தாக்குதல்களை நடத்தினர்.

அதில் 8 இராணு வீரர்களும் ஒரு பொலிஸ் காரரும் உடல் சிதறிப் பலியானார்கள். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். (கு)

# அமெரிக்க படை மீது தாக்குதல்

## ஈராக்கில் ஆறு அப்பாவிகள் பலி

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்கப் படையினரின் ரோந்து வாகனத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் ஆறு அப்பாவி பொதுமக்கள் பலியாயினர். பலர் காயமடைந்தனர். கடந்த சனிக்கிழமை இரவிலிருந்து நடந்து வரும் தொடர் குண்டு வெடிப்புக்களில் இதுவரை 20 பேர் பலியாகியுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் சதாம் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர், அவரது ஆதரவு தீவிரவாதிகள் தாக்குதல்கள் நடத்தாத நாட்களே இல்லை. தினமும் குண்டுவெடிப்புக்கள், தற்கொலைப் படைத்தாக்குதல்கள் உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

பாக்தாத்தின் தெற்குப் பகுதியிலுள்ள ரயில்வே லைன் வழியாக நேற்றுமுன்தினம் ரோந்து வந்த அமெரிக்கப் படையினரின் காரைக் குறிவைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஆறு அப்பாவி பொதுமக்கள் பலியானார்கள். 14 பேர் காயமடைந்தனர். அதுமட்டுமின்றி கடந்த சனிக்கிழமை இரவிலிருந்து ஆங்காங்கே தொடர் குண்டுவெடிப்பு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் நடந்து வந்தன. (கு)

WORLD NEWS உலக தரிசனம்

# 148 பேரை கொன்ற வழக்கு;

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் சதாமுக்கு 30 நாளில் தூக்கு

(பாக்தாத்)

ஈராக் முன்னாள் அதிபர் சதாம்உசேன் செய்த குற்றங்கள் குறித்து தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. தூஜாயில் என்ற இடத்தில் 148 கிராம மக்களைக் கொன்றது தொடர்பாக விசாரணை தற்போது நடந்து வருகிறது.

இதன் விசாரணை நேற்றுமுன்தினம் நடந்தது. ஆனால் சதாம் உசேன் ஆஜராகவில்லை. சதாம்உசேன் காலத்தில் இருந்த அதிகாரிகளிடம் விசாரணை நடந்தது. அப்போது கொலைகளுக்கான பல்வேறு ஆதாரங்கள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. கடந்த முறை நடந்த விசாரணையின் போது சதாம்உசேன் கிராம மக்களைக் கொலை செய்வதற்கு உத்தரவிட்டதை ஒத்துக்கொண்டார்.

இந்த விசாரணை குறித்து அரசு தரப்பு தலைமை வக்கீல் ஜாபர் - சாபி கூறியதாவது,

தற்போது நடந்து வரும் இந்த வழக்கில் சதாம்உசேன் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்படும். இதில் அப்பில் எதுவும் செய்ய முடியாது. மேல் நீதிமன்ற விசாரணையும் கிடையாது.

எங்கள் நாட்டு சட்டப்படி நீதிமன்றில் தண்டனை விதிக்கப்பட்டால் 30 நாளில் அதை நிறைவேற்ற வேண்டும் அதன்படி தண்டனை விதிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் சதாம்உசேன் தூக்கில் போடப்படுவார் என்றார். (கு)

# நாசா அனுப்பிய விண்கலம் செவ்வாய் கிரக சுற்றுவட்டப்பாதையில் நுழைந்தது

(பசதீனா)

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா அனுப்பிய விண்கலம் செவ்வாய் கிரக சுற்று வட்டப் பாதையில் தன்னைப் பொருத்திக்கொண்டு சாதனை படைத்துள்ளது.

செவ்வாய் கிரகம் குறித்து நாசா பல ஆண்டுகளாக ஆய்வு நடத்தி வருகிறது. அந்தக் கிரகத்தில் தண்ணீர் உள்ளதா? உயிரினங்கள் வாழ வாய்ப்புள்ளதா? என்பதே நாசாவின் முக்கிய ஆய்வாக இருக்கிறது. இறக்கு முன் நான்கு விண்கலங்களை நாசா அனுப்பியுள்ளது. இதில் இரண்டு விண்கலங்கள் செவ்வாய் சுற்று வட்டப் பாதையில் தன்னைப் பொருத்திக்கொள்வதில் சிறப்பாக செயல்பட முடியாமல் தோல்வியை தழுவியுள்ளன.

இந்தநிலையில் 22 டன் எடை கொண்ட எம்.ஆர்.ஓ. என்ற விண்கலத்தைச் செவ்வாய் கிரகத்தை நோக்கி நாசா அனுப்பியது. இந்த விண்கலத்தைக் கட்டுப்படுத்தும் பணி அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள பசதீனா ஆய்வு மையத்தில் மேற்கொள்ளப்பட்டது.

ஏழு மாத பயணத்துக்குப் பிறகு எம்.ஆர்.ஓ. விண்கலம் நேற்றுமுன்தினம் செவ்வாய் சுற்று வட்ட பாதையில் தன்னை வெற்றிகரமாக பொருத்திக்கொண்டது. விண்கலத்தின் இந்தப் பணியை பசதீனா ஆய்வு மையத்தில் இருந்த விஞ்ஞானிகள் மிக ஆர்வத்துடன் எதிர்பாத்து இருந்தனர்.

செவ்வாய்சுற்று வட்டப் பாதையில் பொருத்திக்கொள்ள வேண்டும் என்றால் அந்தக் கிரகத்தின் ஈர்ப்பு விசை அருகே விண்கலம் செல்ல வேண்டும். இதற்கான முயற்சியில் எம்.ஆர்.ஓ விண்கலத்தில், இருந்த இரண்டு ரொக்கெட்கள் ஈடுபடுத்தப்பட்டன.

அதன் பின்னர் 27 நிமிடங்களில் தனது வேகத்தை எம்.ஆர்.ஓ விண்கலம் குறைத்துக் கொண்டு செவ்வாய் சுற்று வட்டப் பாதையில் தன்னை நன்றாக பொருத்திக் கொண்டது.

உடன் விஞ்ஞானிகள் அனைவரும் மகிழ்ச்சி கடலில் மூழ்கினர் ஒருவருக்கு ஒருவர் கை குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தனர். கைகளைத் தட்டிப் பாராட்டினர். (கு)

## சக்தி வாய்ந்த செய்மதிகள்

ஐரோப்பாவின் மிகவும் சக்தி வாய்ந்த இரண்டு செய்மதிகளை எரியொன் 5 ஈசீஏ ரொக்கட் விண்வெளிக்குக் கொண்டு சென்றுள்ளது.

இந்தச் செய்மதிகளைப் பிரெஞ்சுயானா நாட்டிலிருந்து விண்வெளிக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

விண்வெளிக்கு செலுத்தப்பட்ட இரண்டு செய்மதிகளில் ஒன்று ஸ்பெயின் பாதுகாப்பு அமைச்சுக்குச் சொந்தமானதென்றும், மற்றையது பிரான்ஸ் நாட்டு தொலைத் தொடர்பு நிறுவனத்துக்குச் சொந்தமானதென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-7)

# அரசாங்க அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

## 2006 ஆம் ஆண்டுக்கான வழங்கலுக்கான கூறுவிலைகள் கோருதல்

மாவட்டச்செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காக கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குனர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 100.00 ம் மீளளிக்கக்கூடிய பணமாக ரூபா 5000.00 வும் செலுத்துதல் வேண்டும் இச்செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட தன்மைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டு 2005.04.05 ஆம் திகதி பகல் 10.00 மணிக்கு முன்னர் இச்செயலகத்தில் கிடைக்கக்கூடியதாக ''தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.'' என்று பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாக இச்செயலகத்தின் களஞ்சியக்கிளையில் உள்ள கேள்விப் பெட்டியிலோ இடலாம். கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் 2006 ஆம் ஆண்டுக்கான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகள் என இடப்படவேண்டும். 2005.04.05 ஆந் திகதி பகல் 10.30 மணிக்கு கேள்விப் பெட்டி திறக்கப்பட்டு விண்ணப்பித்தவர் முன்னிலையில் வாசிக்கப்படும். அப்போது விண்ணப்பித்தவரோ அல்லது அவரது முகவரோ சமூகமளிக்கலாம். வழங்கல் கட்டளை கிடைத்து 1 மாதத்திற்குள் பொருட்கள் யாவும் இச் செயலகத்திலுள்ள களஞ்சியக் காப்பாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தளபாடங்களுக்கான மாதிரிகளை இச்செயலகத்திலுள்ள நலன்புரிக்கிளையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். மாதிரிக் கொவ்வாத பொருட்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**1. மரத்தளபாடங்கள்** வேம்பு முதிரை

1 அலுவலக மேசை (பெரியது)
2. அலுவலக மேசை (சிறியது)
3. கைபிடிக்கதிரை
4. சாதாரண கதிரை
5. மாநாட்டு மேசை
6. மாநாட்டுக்கதிரை
7. கணனி மேசை
8. கோவை றாக்கைகள்
9. கோவைத் தட்டுக்கள்

**2. உருக்குத் தளபாடங்கள்**

1. அலுமாரி 6x3x1 1/2
2. அலுவலக மேசை
3. கணனிகதிரை
4. கோவை அலுமாரி
5. கோவை றாக்கைகள்

**3. பிளாஸ்ரிக் தளபாடங்கள்**

1. பிளாஸ்ரிக் கதிரை கைபிடி உள்ளது (Arpico)
2. கோவை தட்டுக்கள்
3. வாளிகள்

**மாவட்டச் செயலகம்**
**யாழ்ப்பாணம்.**
**08.03.2006**

**கே. கணேஷ்**
**அரசாங்க அதிபரும்**
**மாவட்டச் செயலாளரும்.**

(C-227)

நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் எப்போதும் அதிகமாக யாதொரு இடையூறும் இன்றி நடைபெறவேண்டும் என்று எண்ணினால் நாம் உலகத்தில் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கமாட்டோம். -ராஜாஜி

வலம்புரி

## ஜே.வி.பி., ஹெலஉறுமயவுடன் பேசும் முடிபை நோர்வே மாற்ற வேண்டும்

தனது அனுசரணைப் பணி குறித்து ஜே. வி.பி. மற்றும் ஜாதிக ஹெலஉறுமயவுடன் பேச்சு நடத்தப் போவதாக நோர்வே அரசு அறிவித்துள்ளது.

சமாதான அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயை விலத்த வேண்டும் என்பது ஜே.வி.பியினதும் ஜாதிக ஹெலஉறுமயவினதும் முடிபு.

இம் முடிபு ஜெனீவாப் பேச்சுக்குப்பின்னர் எழுந்ததல்ல. இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வே என்று ஈடுபட்டதோ அன்றிலிருந்து பேரினவாதக் கட்சிகள் நோர்வேயை துரத்த வேண்டும் என்பதை சதா உச்சாடனம் செய்து கொண்டே இருக்கின்றன.

நோர்வேயின் சமாதானப் பணிக்கெதிராக பௌத்த பிக்கு ஒருவர் உண்ணாவிரதம் இருந்தது முதல் , நோர்வே நாட்டின் தேசியக் கொடியை எரியூட்டியதுவரை பேரினவாதிகளின் எதிர்ப்பு உத்வேகம்பெற்றே வருகின்றது.

இருந்தும் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி தேர்தலில் ஆதரிப்பதற்காக ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் தனித்தனியாக மகிந்த ராஜபக்ஷவுடன் உடன்படிக்கை செய்து கொண்டன.

அந்த உடன்படிக்கையில், பொதுக் கட்டமைப்பை ரத்து செய்தல், புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்தியமைத்தல் என்பவற்றுடன் சமாதான அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை வெளியேற்றுதல் என்ற வாசகமும் உட்பொருளாக சேர்க்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் நோர்வேயின் சமாதானப் பணிக்கே முடிபு கட்டப்படும் என்றே ஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமயவும் நினைத்திருந்தன.

அந்த நினைப்பில் நோர்வேக்கெதிரான ஆர்ப்பரிப்பை இரண்டு கட்சிகளும் சற்றுத் தணித்துக்கொண்டன.

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு மகிந்த ராஜபக்ஷவும் உடன்பாடல்ல என்பது தெரிந்த விடயமே. அதை அவரே வெளிப்படுத்தியுமுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறுவதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர், அப்போது பிரதமராகவிருந்த மகிந்த ராஜபக்ஷவை பாராளுமன்றத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்துக் கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த மகிந்த , நாங்களும் விடுதலைப்புலிகளும் பேசிக் கொள்வதற்கு நோர்வேயின் அனுசரணை எதற்கு என்றவாறு பதில் அளித்தார்.

அச் சந்திபில் கூடவே, ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச மற்றும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோரும் இருந்தனர்.

மகிந்த பிரதமராகவிருந்த போது நோர்வேக்கு எதிரான போக்கைக்கொண்டிருந்தார் என்பது மறுக்க முடியாத உண்மை.

எனினும் அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற கையோடு வடக்குக் கிழக்கில் படையினர் மீதான தாக்குதல்கள் வலுப்பெற்றன.

மகிந்த ஜனாதிபதியாக பதவியேற்ற ராசி தென்னிலங்கைக்கு படையினரின் சடலங்களே வருகின்றன என்ற பிரசாரத்தால் ஐக்கிய தேசியக் கட்சி குதிக்கத் தொடங்க நிலைமை மோசமானதை உணர்ந்த ஜனாதிபதி மகிந்த அவசரஅவசரமாக நோர்வேக்கு அழைப்பு விடுத்தார்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க முன்வாருங்கள் என்பதே அவரின் அழைப்பாகவிருந்தது.

நல்லதைச் செய்ய வேண்டும் என்ற பெருநோக்குடைய நோர்வே மகிந்தவின் அழைப்பை ஏற்றுப் பணியைத் தொடர்ந்தது.

இதனைப் பொறுக்க முடியாமலே ஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமயவும் நோர்வேயை எதிர்க்கின்றன.

இந் நிலையில் நோர்வேயரசு ஜே.வி.பியுடனும் ஜாதிக ஹெலஉறுமயவுடனும் பேச நினைப்பது நிலைமையை மோசமாக்கி விடும். சிலரின் துள்ளல்களை எல்லாம் கணக்கில் எடுத்தால் காரியம் ஆகாது என்பதை நோர்வே உணர்ந்து கொண்டு தனது முடிபை மாற்ற வேண்டும்.

# அரசாங்கத்துடன் நாம் இணையவும் இல்லை! அமைச்சுப் பதவிகளுக்கு ஆசைப்படவுமில்லை!!

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

சர்வகட்சி மாநாட்டினைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷ விசேட சந்திப்பொன்றை நடத்தியதைத் தொடர்ந்து வழக்கம்போலவே ஊகங்கள் உலாவத்தொடங்கியுள்ளன. முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தில்



இணையப் போவதற்கு முன்னோடியாகத்தான் பேச்சுக்கள் நடைபெற்றிருப்பதாக பேசிக் கொள்கிறார்கள். சமாதான செயற்திட்டத்திற்கான ஆதரவு பற்றியும் , உள்ளூராட்சித் தேர்தல்கள் மற்றும் சுனாமி நிவாரணம் பற்றியும் மட்டுமே பேசினோம் . அமைச்சுப்பதவிகளைப் பெறுவது போன்ற விடயங்கள் நாம் பேசவில்லை . அதற்கு நாம் ஆசைப்படவுமில்லை.

தாம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபடியே நிபந்தனையுடனான ஆதரவைத்தருவதாக கூறியிருக் கிறோம். இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அச் சந்திப்பை யடுத்து தெரிவித்துள்ளார்.

ஆங்கில வார இதழொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் இதுபற்றிக் கூறுகையில் , ஜே.வி.வி, ஹெல உறுமயவினர் கூறுவது போன்று போர் நிறுத்த ஒப்பந்தம் அரசியற் சட்டத்திற்கு முரணா னதல்ல அவர்கள் அரசியல் இலாபங்களுக்காக அவ்வாறு கூறுகிற ார்கள் .

ஜெனீவாப் பேச்சுக்களின் ஆரம்பத்தில் அரசாங்கம் கொண்டிருந்த நிலைப்பாடும், பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையும் ஒன்றுக்கொன்று முரணாகஇருப்பதாக சுட்டிக்காட்டப்படுவது துரதிஷ்டவசமானது .பேச்சுக்களின் கடுமை மக்கள் ஆணை என்பவற்றை கள யதார்த்த நிலைகளுடன் சமநிலைப்படுத்தி இரு தரப்பினரும் போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள வைக்கும் நியாயப்பாட்டுடன் , சர்வதேச சமூகத்தின் முன்நிலையில் முன்யே ாசனையுடன் அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டியுள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு –கிழக்கின் பிரச்சினையை வெறுமனே தமிழர்களுடனானது என்று மட்டுப்படுத்த முடியாது .

தமிழ் சிங்கள இனப்போரில் முஸ் லிம்களும் ஒருதரப்பினராக சம்பந்தப்பட்டுள்ளனர். அரசியலில் தனித்துவ அடையாளம் உள்ள முஸ்லிம்கள் சுயாட்சி அடிப்படையிலான தீர்வின் தேவையுடையவர்கள் .

ஆனால், 1980 ஆண்டுகளிலிருந்து அவர்களது அரசியல் அபிலாஷைகள் விட்டுக்கொடுக்கப்பட்டே வந்திருக்கின்றன .

விடுதலைப் புலிகள் எமது அபிலாஷைகள் தொடர்பாக இருதரப்பு ஒப்பந்தம் செய்திருப்பவர்கள் அவ்வாறே சுதந்தி ர முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் எம்முடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச்செய்துள்ளன. தனியான முஸ்லிம் பிரதிநிதித்துவம் தொடர்ந்து விட்டுக்கொடுக்கப்பட்டே வந்து கொண்டிருக்கிறது.

காலப்பொருத்தத்திற்கு காத்திருக்கும் ஒரு சர்ச்சையாக இது இருந்து வருகிறது. இவ்விடயத்தில் உரிமையற்ற நிலையிலும் சமாதான செயற்பாட்டில் முஸ்லிம்கள் நேரடியானதும் அடிப்படையானதுமான தொடர்புகொண்ட நிலையில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு அங்கீகரிக்கப்பட் டிருக்க வேண்டும .

தாமதமின்றி இது நிறைவேற்றப்பட வேண்டும் . இவ்வாறு ராவூப் ஹக்கீம் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார். (க–6)

# துணைக்குழுக்களின் தாக்குதல்கள் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கும்

## எழிலன் எச்சரிக்கை



வாகரை கட்டுமுறிப்பு பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் நிலையம் மீது படையினரும், படையினருடன் இணைந்து செயற்படும் துணைக்குழுக்களும் மேற்கொண்ட தாக்குதல் சம்பவமானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பேச்சுக்களை பாதிக்கும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்.

வாகரை கட்டுமுறிப்புப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்ன ரங்க காவலரண் மீது கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், கடந்த வெள்ளிக்கிழமை இரவு படையினரும் அவர்களு டன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களும் எமது முன்னணிக் காவலரண் மீது தாக்குதல் நடத்திய போது எமது போரா ளிகள் பதில் தாக்குதல் நடத்தி முறியடித்தார்கள்.

இச்சம்பவத்தில் தாக்குல் நடத்த வந்தவர்கள் ஆயுதங்களையும் கைவிட்ட நிலையில் காயமடைந்தவர்களுடன் தப்பி ஓடிவிட்டார்கள்.

எமது காவலரண் மீதான தாக்குதல் சம்பவம், பாரிய போர் நிறுத்த மீறலாகும். இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டுள்ளோம். அதேவேளை இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் எதிர்வரும் ஏப்ரல் 19ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுக்களை பாதிக்கும் என்றார். (க)

## வடக்கு - கிழக்கு மாகாண கிரிக்கெற் அணித் தெரிவுக்குரிய வீரர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு–கிழக்கு மாகாண கிரிக்கெற் அணித் தெரிவுக்குரிய பயிற்சி முகாம் நேற்று யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளிலிருந்தும் சுமார் 50 வீரர்கள் பங்கு பற்றினர்.

இவர்களிலிருந்து சுமார் 20 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்குரிய விசேட பயிற்சிகள் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

இவர்களுக்குரிய பயிற்சிகளை கொழும்பிலிருந்து வருகைதந்த வடக்கு –கிழக்கு மாகாண கிரிக்கெற் பயிற்சியாளர் குமார் இராமநாதன் நெறிப்படுத்தினார்.

இதேவேளை, இவர் களநிலை வீரர்களுக்கான பயிற்சியினையும் நேற்று நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு–கிழக்கு மாகாண அணித் தெரிவுக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களின் பெயர் விபரம் வருமாறு,

புனித பத்திரிசியார் கல்லூரியிலிருந்து டபிள்யூ.ஐ. ஜக்ஸின், வி.விது பாலா, ஆர்.வி.றெக்னோ ஜே. எவ்.கொலின்ஸ், ஏ.யேந்திரன்,ஏ.மரின்குமார் ,

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து ஜே. செந்தூரன்,எம்.அமராதீஸன்,

யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து ரி. மயூரப்பிரியன் ரி. கௌசிகன்.

யாழ் மத்திய கல்லூரியிலிருந்து ஆர்.பிரசாத், டி.சுதர்ஸன், என்.நவநீத், ஜே.வியாசன், கே.செல்டன், டபிள்யூ.சி. ஜோன்சன்,

யாழ்.புனித பரியோவான் கல்லூரியிலிருந்து ரி.நிரூபன், பி.நேசவர்மன்,ஜி.சஞ்சீவன்,என்.நவகீதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான மேலதிக பயிற்சி முகாம் எதிர்வரும் 31ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, இப்பயிற்சி முகாமை நடாத்திய பயிற்றுநர் குமார் இராமநாதனிடம் இப்பயிற்சி முகாம் எதற்காக எனக் கேட்ட போது,

மத்திய, மேல்மாகாண வீரர்களின் தரத்திற்கு யாழ். குடாநாட்டு வீரர்களை உயர்த்துவதே தனதுநோக்கம் எனத் தெரிவித்தார். (க–4)

## கணித பாடத்தில் அதிக புள்ளிகளை பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட் சையில் கணித பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கென புலமைப்பரிசில் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 25 வயதுக்கு மேற்படாத மாணவர்கள் ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க புலமைப் பரிசில்கள் வழங்கப்படும் இதற்கான செலவினத்தை கல்வியமைச்சு பொறுப்பேற்கும்.

இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கொழும்பில் உள்ள உயர் கல்வி அமைச்சு அலுவலகத்திலிருந்து நாளை முதல் இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (சு–7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



எழுந்து நில் தைரியமாக இரு . வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்து கொள் .உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்

# வெள்ளை வானில் வந்தோரால் மாணவர்கள் இருவர் கடத்தல்

## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவர்கள் இருவர் நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் கல்குடா வீதியில் வைத்து வெள்ளை வான்காரர்களினால் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மாணவர்கள் மேற்படி வீதியால் சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றது. கடத்தப்பட்டவர்கள் ஜெயராஜ் கிரிசாந் (வயது-15), சுதாகரன் குலோசன் (வயது-15) மற்றைய மாணவர் இவர்களின் பிடியிலிருந்து தப்பித்துள்ளார்.

இவர் மீது கைக்குண்டு வீச முற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வெள்ளை வான் இவர்களைக் கடத்தி வாழைச்சேனை மீன்பிடித்துறை முக இராணுவ முகாம் நோக்கி சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-4)

# தகவல் தொழில்நுட்ப நூல் தமிழில் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்காக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்பாடலுக்கான தகவல் தொழில்நுட்பம் (ICT) பாடத்திற்கான நூல் வெளியாகியுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கணனிக் கல்வி ஆசிரியர் இ.சுகுமார் எழுதிய இந்நூல் நேற்று வெளியிடப்பட்டது.

இந்நூலினை கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பொ.கமலநாதன் வெளியிட்டு வைத்தார். இதன் வெளியீட்டுரையினை பிரதியதிபர் வி.மகேந்திரன் நிகழ்த்தினார்.

இந்நூலானது க.பொ.த. சாதாரண மாணவர்களுக்கு மட்டுமன்றி க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கும் உயர் தொழில் நுட்பக் கல்லூரி, கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கும் தகவல் தொழில் நுட்பத்தின் அடிப்படை அறிவை பெறவிரும்பும் அனைவருக்கும் உகந்ததாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# நூல்கள் அன்பளிப்பு

இன்று காலை முதல் நண்பகல் வரை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் பௌர்ணமி தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1982 ஆம் ஆண்டு தொடக்கம் இத் தினம் அன்னையின் சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. இம் முறை வதிரி ,கரவெட்டி ஸ்ரீ பரமானந்த சுவாமிகள் இல்லச்சிறார்கள் இத் தின விழாவில் பங்கு பற்றவுள்ளனர்.

இவர்களுக்கு ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரது நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். (கு)

# பயிற்சி

யாழ்.மாவட்ட அனைத்துப் பாடசாலை மக்கள் நலன்புரிச் சங்க படையணி அங்கத்தவர்களுக்கும் அணித் தலைவருக்கும் உதவியணித் தலைவருக்குமான தலைமைத்துவம் மற்றும் சங்கச் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி வகுப்பு இன்று யாழ்.மத்திய கல்லூரியில் காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவுரையும் நடைபெறவுள்ளது. (கு-132,133)

# சிறிலங்கா...

னால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

குறிப்பிட்ட இடைக்காலத் தடை உத்தரவு கடந்த முதலாம் திகதி முதல் நீக்கப்பட்டதையடுத்து தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ள நீதிமன்றம் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரி கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். (ச-4,9)

# பளைக்குச்...

ஆம் படைப்பிரிவில் அனுமதி பெற்றே பளை நோக்கி 40 முஸ்லிம் மக்கள் சென்றனர்.

முகமாலை சோதனைச் சாவடியில் அவர்களை வழிமறித்த படையினர் அவர்களை அச்சுறுத்தியதுடன் மூன்று மணி நேரத்திற்கு மேலாக தடுத்தும் வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

தம்மை பளைப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்குமாறு கேட்ட போதிலும் இறுதிவரை அவர்களுக்கான அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. (ச-4)

# எரிக்சொல்...

தெரிவிக்கப்பட்டது.

எரிக் சொல்ஹெய்மின் பயணத் திற்குரிய ஏற்பாடுகளை நோர்வேத் தூதரகம் மேற்கொண்டுவருவதாக இலங்கைக்கான நோர்வேத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை வரும் எரிக் சொல்ஹெய்ம் அரசு-விடுதலைப்புலிகளுடனான சந்திப்புக்களை முடித்துக் கொண்டு நாடு திரும்புகையில் இந்திய அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார். (ச-4)

# பிரதமர்...

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர் ஏற்பாடு செய்த நிகழ்வுகள் சிலவற்றிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார். (ச-9)

# இளம்பரிதியுடன் நேற்று...

பினர் மட்டுமே தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் நடமாடலாம் என்ற ஜெனீவாத் தீர்மானத்தை மீறும் வகையில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு சென்றிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் ஆகிய சதீஸ், ராசிக், உதயன், துளசி ஆகியோர் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் நூற்றுக்கணக்கான மக்கள் முன்னிலையில் ஆயுதத்துடன் நடமாடினர் எனவும் யாழ்.மாவட்டத்தில் பரவலாக சுற்றிவளைப்புத் தேடுதல்களை படையினர் மேற்கொள்வதாகவும் இளம்பரிதி சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் அதிகாலை வலி. மேற்கு பனிப்புலம் பகுதியை சுற்றி வளைத்து வீடுவீடாக தேடுதலில் ப்டையினர் ஈடுபட்டு காலையில் வேலைக்குச் சென்றவர்களையும் தடுத்துத் திருப்பினர்.

யாழ்.மாவட்ட சிறிலங்காப்படை தளபதி கல்வியதிகாரிகளை அழைத்து பயமுறுத்தும் வகையில் சில கட்டுப்பாடுகளைவிதித்தமையானது குடிசார் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடாகவுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 915 பொதுமக்களது வீடுகளுக்குள்ளும் பொதுக் கட்டடங்களுக்குள்ளும் அனுமதியின்றி உட்பிரவேசித்து தன்னிச்சையாக அவற்றில் முகாம்களையும் காவலரண்களையும் அமைத்து விட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் அல்லலுறும் அம்மக்களுக்கு இப்போது வாடகை தருவதாக படையினர் கூறுவது கபடத்தனமாக மக்களை கேவலப்படுத்தும் நோக்கம் கொண்டதாகும் என இளம்பரிதி குற்றஞ்சாட்டியுள்ளார். (ச-4)

# வடக்குக் கிழக்கில்...

வேண்டும் என தேர்தல் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

அடையாள அட்டை இல்லாதவர் தேர்தலின் போது கிராம சேவையாளரோ அல்லது பிரதேச செயலாளரோ உறுதிப்படுத்திய பத்திரம் ஒன்றை உபயோகிப்பதற்கு அனுமதித்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் கட்சித் செயலாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் கணக்கெடுப்பு மையங்களுக்கு ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் இரண்டு பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஒரு கட்சியின் சார்பில் ஐந்து பேருக்கு அனுமதி வழங்குவதென்று முடிபெடுக்கப்பட்டுள்ளது. வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் நடைமுறையிலுள்ள வழக்குகள் முடிபுக்கு வந்தவுடன் அந்தந்த சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார் (ச-9,5)


## அதிபர் பரீட்சைக்கான துரித வழிகாட்டல் வகுப்புகள்

16.03.2006 பி.ப. 4 மணிக்கு ஆரம்பம்

கையேடுகள், கடந்தகால வினாக்கள் வழங்கப்படும்.
பரீட்சைத் தினம் வரை வழிகாட்டல் நடைபெறும்.
தொடர்பு:- DDCA (கல்வி நிலையம்)
(யாழ். ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக்கு அருகாமை)
101/10 ஸ்ரான்லி வீதி -021 222 5549
20 யாழ்.பஸ் நிலையம் - 021 222 6818

தகுதியான துறைசார் ஆசிரியர்களால் வழிகாட்டப்படும். (12)


# துணைக் குழுக்களின்...

மட்டக்களப்பு வாகரை மற்றும் வவுணதீவுத் தாக்குதல்களை துணை இராணுவக் குழுவின் உதவியுடன் அரச படைகள் நடத்தியுள்ளன. ஜெனீவாவில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி தமிழ்த் துணைஇராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து வன்முறைகளை முடிபுக்குக் கொண்டுவர ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னரே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

துணை இராணுவக் குழுக்களின் உதவியுடன் இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்படுவது என்பது ஜெனீவாக்கூட்டறிக்கைக்கு எதிரானது.

இதனை அரசாங்கத்தின் நம்பிக்கையற்ற செயற்பாடாக நாம் பார்க்கின்றோம். ஜெனீவாப்பேச்சுக்களுக்குப் பின்னர் நடைபெற்று வரும் சம்பவங்களை எமது தலைமைப் பீடம் அவதானித்து வருகின்றது.

ஜெனீவாக்கூட்டறிக்கைக்குப் பின்னர் கிழக்குப் பகுதியில் தமிழ்த் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்கள் இதுவரை களையப்பட வில்லை.

எமது காவலரண்கள் மீதான கருணா குழுவினரது அண்மைய தாக்குதல்கள் உட்பட தமிழ்த் துணை இராணுவக் குழுக்கள் விடயத்தில் மகிந்த ராஜபக்ஷ நிர்வாகம் கண்ணை மூடிக்கொண்டு வேடிக்கை பார்க்கின்றது என அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாப் பேச்சுகளுக்கு எதிராக தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் பாதுகாப்புத் தரப்பினரும் செயற்படுவதும் ஆத்திர மூட்டும் அறிக்கைகளை வெளியிட்டு வருவதும் தற்போதைய அமைதி முயற்சிகள் மீது எமது தலைமைப் பீடத்திற்கு நம்பிக்கையை இழக்கச் செய்து வருகின்றது என்றார்.

இதேவேளை ஜெனீவாப் பேச்சு மேசையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களைப் பயங்கரவாத இயக்கமாக ஒப்புக் கொண்டிருக்கின்றனர் என்று சிறிலங்காப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

கெரில்லா இயக்கமாகவிருந்து தேசிய விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் எப்படி வளர்ச்சியடைந்திருக்கிறார்கள் என்பதை நான் விளக்கி வந்தேன்.தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் புரட்சியானது சுயநிர்ணய உரிமைக்கானது என்றும் தமிழர்களின் ஆயுதப் போராட்ட காலத்தில் அரச படையினர், புலனாய்வாளர்கள் உள்ளிட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழரின் ஆயுதப் போராட்டம் தொடர்பாக பிழையான புரிதலுடன் உள்ளார். அவர் தமிழர் விடுதலைப்போராட்டத்தை பயங்கரவாத அமைப்பாகப் பார்க்கின்றார் என பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (ச-4,5)

## 1 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலியும் 47வது பிறந்தநாள் நினைவும்

### திருமதி இந்திராணி விஜயவாசன்

(ஸ்ரூடியோ விஜேந்திரா)



அன்னை மடியில் 14.03.1959 | அன்னை மடி விட்டு 14.03.2005

திதி: பூர்வ பக்க சதுர்த்தி: 01.04.2006

கடமை முடிந்ததென்று காற்றாய்ப் பறந்தவளே
என் கடமை முடிந்து வரும் வரை காத்திருப்பாயா
விண்வெளியில்

சோலை அம்மன்
கோவிலடி,
மீசாலை,
077-6136575.

என்றும் உன்நினைவுகளுடன்
அன்புக் கணவர், அம்மா,
பிள்ளைகள். (192)

## வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

## கேள்வி அறிவித்தல்-கால நீடிப்பு

04.11.2005ந் திகதி இப்பத்திரிகையில் பிரசுரமான சந்தைகள், இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்குவது சார்பான எமது விளம்பரத்தில் விண்ணப்பிக்கப்படாத சந்தைகள், இறைச்சிக் கடைகளிற்கான முடிவுத் திகதிகள் பின்வருமாறு கால நீடிப்பு செய்யப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 16.03.2006 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதி: 17.03.2006 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 17.03.2006 பி.ப 3.00 மணி
(மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி. (c-228)

த.நடராசா
செயலாளர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 14.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.